# LAABH SAMACHAR

Volume: 09 | Issue : 04 | AUGUST 2020 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....



# சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536










## வந்துவிட்டது - மொபைலில் ஸௌராஷ்ட்ர மொழி




கைப்பேசியில், கூகுளின் G-Board-ல் நமது ஸௌராஷ்ட்ரீ மொழிக்கான எழுத்துக்கள் அடங்கிய Key-ஐ வடிவமைத்து பதிவேற்றம் செய்துள்ளனர். இதனால் நமது எழுத்துகள் தகவல் பரிமாற்றம் செய்வதற்கு மிகவும் எளிதாக்கியுள்ளது. நமது மொழியை கூகுள் G-Board-ல் கொண்டு வர முயற்சி மேற்கொண்டவர்களுக்கு ஸௌராஷ்ட்ர சமூகத்தின் சார்பாக சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

அழகி தட்டச்சு மென்பொருளில் நமது ஸௌராஷ்ட்ரீ எழுத்து இடம்பெற்றுள்ளது. அதை திரு. **விஸ்வநாதன் பாலசுப்ரமணியன்** அவர்கள் (தமிழ் சமூகத்தை சேர்ந்தவர்) வடிவமைத்து உள்ளார்.

நம் ஸௌராஷ்ட்ர மொழி வளர்ச்சிக்கு பல்வேறு சேவைகளை நம் சமூகத்தினர் ஆற்றி வருகின்றனர். குறிப்பாக, 8 வகையான ஸௌராஷ்ட்ரீ ராமராய் எழுத்து வடிவங்களை (Unicode Font) திரு. K.S. **செந்தில் குமார்,** திரு. D.R. **ஜெயராம்,** திரு. **சுவதேஷ்,** திரு. O.S. **சுப்பிரமணியன்** திரு. V.K. **கிருஷ்ணமூர்த்தி** ஆகியோர் இணைந்து வடிவமைத்து வருகின்றனர்.

ஸௌராஷ்ட்ர ஸாஹித்ய ஸதஸ் மூலம் திரு. T.R. **தாமோதரன்** அவர்கள் நமது ஸௌராஷ்ட்ரீ மொழியை தமிழகம் மட்டுமல்லாமல், வெளிநாட்டில் வாழும் நம் சமூக மக்கள் என ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுத்து வருகிறார்.

**மொழி வளர்ச்சிக்கு சேவை புரிந்துவரும் அனைவருக்கும்**
**ஸௌராஷ்ட்ர சேம்பர் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.**

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ச்கோ மொன்னு பொறெ*

## நமஸ்கார்...

மதுரையை தமிழகத்தின் இரண்டாம் தலைநகரமாக ஆக்க வேண்டும் என்கிற கோரிக்கை அனைத்து தரப்பு மக்களிடம் மீண்டும் எழுந்துள்ளது. மதுரை மாநகரம், உயர்நீதி மன்றம், எய்ம்ஸ், நெய்பர் (மருந்தியல் அமைப்பு), சர்வதேச விமான நிலையம், எல்காட் பூங்கா, தொழிற்பேட்டைகள், எதிர்காலத்திற்கு புதிய தொழில்கள் அமைக்க / புதிய திட்டங்களுக்கு தேவையான நிலங்கள், மதுரைக்கு அருகில் அமைந்துள்ள தூத்துக்குடி துறைமுகம் என அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. அதுமட்டுமல்லாது, தென் தமிழகத்தின் நுழைவுவாயிலாக மதுரை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் தலைநகராக உருவெடுக்கத் தேவையான அனைத்து அம்சங்களும் நிறைந்த மாவட்டமாக மதுரை உள்ளது.

ஆகவே, தமிழக அரசு இரண்டாம் தலைநகராக மதுரையை தேர்வு செய்தால், தமிழகத்தின் பொருளாதாரம் மேம்படும், உள்கட்டமைப்பு பலம்பெரும், அரசும் எளிமையாக நிர்வாகத்தை மேற்கொள்ள முடியும், போக்குவரத்து மற்றும் பயணச்சுமை குறையும், பெரிய தொழிற்சாலைகளை கொண்டு வருவதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகும், மக்கள் வாழ்வாதாரம் உயரும். மேலும், சுற்றுலா மற்றும் சேவைத் துறை வளர்ச்சியடையும். நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், மதுரை மாநகரம் இரண்டாம் தலைநகரமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது.

**ஏற்கனவே, பாண்டிய சாம்ராஜ்ஜியத்தின் தலைநகராகவும், முத்தமிழ் சங்கத்தின் தலைமைப்பீடமாகவும் இருந்த மதுரைக்கு தமிழகத்தின் இரண்டாவது தலைநகரம் என்பது மிகவும் பொருந்தும்.**

– குமரன் B ஜதுவா

## திருக்குறள்

**காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு**

ஸௌராஷ்ட்ர மொழியில்
பாஞ்ஸம்டன் பங்கும் கொ[2]லமரய் த[4]க்குனா
ஸூலித[4]ரெ சூருன்மார் ஐஸ்து

**பொருள்:** (ஏனெனில், இட வசதியைத் தேடிச் சொந்த இருப்பிடத்தையும் விட்டுவிட்டு அபாயத்தில் சிக்கிக் கொள்ள நேரும். எதைப்போல் என்றால்) முகத்தில் வேல்களைப் போன்ற தந்தங்களுள்ள அச்சமில்லாத யானை கால்கள் புதைந்து கொள்ளும்படியான சேற்று நிலத்தில் சிக்கிக்கொண்டால், அதைச் சிறு நரியும் வென்றுவிடும்.

அதிகாரம் 50 | இடன் அறிதல் (காரியம் செய்யத்தக்க இடத்தை அறிதல்) | அரசியல்

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

21.07.2020 – **The Secret power of Sub-concious Mind** என்ற தலைப்பிலான நிகழ்ச்சி, மாலை 6 மணி அளவில் ஜூம் செயலியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. T.R. பிரகாஷ் குமார் Training Manager, Tata AIA Life Insurance Co. Ltd. அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

04.08.2020 – **Latest Amendments in Labour Act** என்ற தலைப்பிலான நிகழ்ச்சி, மாலை 6 மணி அளவில் ஜூம் செயலியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. L.G உமேஷ் கண்ணன் Sr. General Manager, HRD, MRF Limited, Perambalur அவர்கள் கலந்து கொண்டு, சமீபத்திய தொழிலாளர் சட்ட திருத்தம் குறித்து விளக்கினார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. J.S. சாயி ஜீவன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.

08.08.2020 – நமது சேம்பர் முன்னாள் செயற்குழு உறுப்பினர் திருமதி. A.R. மஹாலட்சுமி அவர்கள் பா.ஜ. கட்சியின் மாநில துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக, அவரை நமது சேம்பர் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

15.08.2020 – பாரத தேசத்தின் 74ம் ஆண்டு சுதந்திர தினத்தை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகத்தில் சேம்பர் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் சமூக இடைவெளியைக் கடைபிடித்து கொண்டாடினர். காலை சரியாக 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார்.

– K.K. தினேஷ்

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

**Kindly Save our Whatsapp No:**
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

கடந்த மார்ச் மாதம் முதல் உலகையே அச்சுறுத்தி வந்து கொண்டிருக்கும் கொரோனா தொற்று காரணமாக லாப் ஸமாச்சார் இதழின் மின் இதழாக அனைவருக்கும் அனுப்பப்பட்டது. புத்தகமாக நாம் அச்சடித்து நமது அங்கத்தினர்கள் மற்றும் நமது சமூக பொது ஸ்தாபனங்களுக்கு அனுப்புவது வழக்கம். ஆனால், மின் இதழாக வெளியிட்ட போது நமது அங்கத்தினர்கள், சமூக பொது ஸ்தாபனம் மட்டுமல்லாமல் நமது சமூக மக்கள் அனைவருக்கும் சென்றடையும் வகையில் சமூக வலைதளங்கள் மூலம் மின் இதழை பகிர்ந்தோம். தற்போது மின் இதழ் 10000க்கு அதிகமான மக்களை சென்றடைந்துள்ளது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மத்திய அரசு தற்போது வரலாற்று சிறப்புமிக்க புதிய கல்விக்கொள்கையை அறிமுகம் செய்துள்ளது என்பதை அனைவரும் அறிவர். மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் தான் இதற்கு முற்றிலும் மாறுபாடான கருத்துக்கள் வந்துகொண்டிருக்கின்றன. பல மொழிகளை அறிந்தால் என்ன நன்மை என்று வியாபார மக்கள் நன்கு அறிவார்கள். புதிய கல்விக்கொள்கையில் அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப விரும்பிய, மொழியினை தேர்ந்தெடுத்து படிக்கும் வாய்ப்பு ஆரம்பம் முதலே நமது குழந்தைகள் பெறுவது மிகவும் வரவேற்கத்தக்கவை. ஆறாம் வகுப்பு முதல் தொழில் கல்விக்கு அடித்தளம் அமைக்கும் வாய்ப்பு பெறுவார்கள். நமது அடுத்த தலைமுறையினர், இதனால் பன்முகத் தன்மையோடு தொழில் வளம் பொருந்திய சமூகத்தை உருவாக்கும் காலம் கனிந்துவிட்டதாகவே தோன்றுகிறது. அங்கத்தினர்கள் மற்றும் இந்த இதழைக் கிடைக்கப்பெற்றவர்கள் இப்புதிய கல்விக்கொள்கையின் அத்தியாவசியத்தை மாநில அரசுக்கும். இதனை நடைமுறைப்படுத்தவிருக்கும் மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கும் வகையில் தங்களின் கருத்துகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நமது ஆலோசகர் திரு. K.K. கருணாகரன், அமர்டெக் திரு. S.R. சுந்தர்நாத், செயற்குழு உறுப்பினர்கள் திரு. T.N. சூரியபிரகாஷ், திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜீ மற்றும் S.M. கார்த்தி குமரன் ஆகியோர் லாப் சமாச்சார் இதழில் விளம்பரம் தர இசைந்துள்ளனர். அவர்களுக்கு லாப் ஸமாச்சார் இதழ் குழு சார்பாகவும் சேம்பர் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- B.S. ஜெனார்த்தனன்

சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ்
158, தெற்கு மாசி வீதி, மதுரை – 1.
Ph : 2320536
வாடிக்கையாளர்களின் சேவையில் 100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901
ஆடவர் மற்றும் பெண்களுக்கான பிரத்யேக ஆடையகம்
SRB பொட்டிக் BOUTIQUE
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1.
போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர், மதுரை-20 போன் : 4961990
எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk




# INDUS FINANCE LTD

A RBI Registered BSE listed NBFC

Head Office - Kothari Buildings, 4th Floor, No. 114 M G Road,
Nungambakkam, Chennai - 600 034. T : 044 - 28331310
E : contact@indusfinance.in W : www.indusfinance.in

Contact us for
All Your Financial needs*

**Property Loans**
**MSME Loans**
**Education Loans**
**Business Loans**
**Vehicle Loans**
**Life Insurance Policy Loans**

For More Details contact
**Mr.Kannappan V**
M : 94440 51147

*Conditions apply

https://www.youtube.com/watch?v=T_VzveU_-wY&feature=youtu.be



# The Secret Power of Subconcious Mind

தொழில்முனைவோர் திறன்மிக்கவர்களாக, எந்த சூழலையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவம் உள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியம். இந்த மனோ பாவத்தை உருவாக்கிக்கொள்வதற்காக **The Secret power of Sub-concious Mind** என்ற தலைப்பில், கடந்த 21.07.2020 அன்று மாலை 6 மணி அளவில் ஜும் செயலியில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. T.R. பிரகாஷ் குமார் Training Manager, Tata AIA Life Insurance Co. Ltd. அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சிறப்பு விருந்தினர் அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. G.R. சுப்பிரமணியன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. T.R. பிரகாஷ் குமார் அவர்கள் தனது உரையில், நாம் எதை அதிகப்படியாக புலன்களால் (பார்த்தல், கேட்டல் போன்றவை) நுகர்கிறோமோ அவை நம் ஆழ்மனதில் பதிந்து அதன் வெளிப்பாடாக நம் செயல்களும் மாறிவிடுகிறது. ஆகவே, நாம் நேர்மறையான விஷயங்களையே நுகர முயற்சி செய்ய வேண்டும். அது இயல்பாகவே நேர்மறையான ஆற்றலை உருவாக்கி நம்மை நல்வழிப்படுத்தும்.

மற்றொன்று, நம் தேவைகளை இந்த பிரபஞ்சத்திடம் கூறினால் அது நிச்சயம் நிறைவேற்றும். இந்த பிரபஞ்சம் மிகவும் ஆற்றல் மிக்கது. நாம் கோரும் தேவை மிகத்தெளிவாக இருப்பது அவசியம். இரவு நேரத்தில் படுக்கும் முன்பு மன ஒருமையுடன் தெளிவான சிந்தனையுடன் பிரபஞ்சத்தை நினைத்து கோரிக்கை வைத்தால் அது நிச்சயம் நிறைவேற்றித் தரும் என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறுவதாக கூறினார். அதற்கு பல்வேறு உதாரணங்களையும், பல்வேறு ஆராய்ச்சி நூல்கள் குறித்த குறிப்புகள் மற்றும் தகவல்களை வழங்கினார். (இது ஒருபுறம் நம் இந்து மதத்தின் கடவுள் நம்பிக்கையுடன் வேண்டுவதாக கூட கூறலாம்).

இதனடிப்படையில் ஒரு தொழில் முனைவோரை காணும்போது, ஒரு தொழில் முனைவோர் என்பவர் தனி மனிதர் அல்ல, அவரை நம்பி நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் உள்ளது. அனைவருக்கும் அச்சாணியாய் செயல்படும் அவரின் ஆற்றல் மிகுந்த பொறுப்பு மிக்கதாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. அதற்கு அவரது மனம் அதீத ஆற்றல் பெற வேண்டும். அதற்கு சிறந்த வழி நேர்மறையான விஷயங்களை உள்வாங்கிக்கொள்ளுதல் அவசியம். பிரபஞ்ச ஆற்றலுடன் இணைந்திருக்க வேண்டும் அதுவே அவரை வலிமைப்படுத்தும் என்று அற்புதமாக பேசி தமது உரையை நிறைவு செய்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட பலர் தங்களின் சந்தேகங்களை கேட்டனர். சிறப்பு விருந்தினராக கலந்த கொண்டதற்கு திரு. T.R. பிரகாஷ் குமார் அவர்களை சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது.

இறுதியாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## இரங்கல்



S.J. ராஜேஷ்
மறைவு: 26.07.2020

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் அங்கத்தினரும், ரோஜா கிராஃபிக்ஸ் உரிமையாளருமான திரு. திரு. S.J. ராஜேஷ், அவர்கள் இறைவனடி சேர்ந்தனர் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவரை இழந்து தவிக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது. அதோடு, ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.




Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

ஒரு மாஸ்க்கை 8 மணி நேரம் மட்டுமே அணியலாம்




https://youtu.be/-JMVniVMLr0

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

https://www.facebook.com/1256710501/videos/10218186306389910/?extid=rXJNPKCNxTycRlPz

## PROGRAM ON LABOUR ACT

தொழிலாளர்கள் சட்ட திருத்தம் குறித்து தொழில் முனைவோர்கள் அறிந்துகொள்வதற்காக **Latest Amendments in Labour Act** என்ற தலைப்பில், கடந்த 04.08.2020 அன்று மாலை 6 மணி அளவில் ஜும் செயலியில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திரு. L.G உமேஷ் **கண்ணன்** Sr. General Manager, HRD, MRF Limited, Perambalur அவர்கள் கலந்து கொண்டார். சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். சேம்பர் இணைச் செயலாளர் திரு. J.S. சாயி ஜீவன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். சிறப்பு விருந்தினர் அவர்களை சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. S.S. பிரேம் குமார் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. L.G உமேஷ் **கண்ணன்** அவர்கள் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அளிக்கப்படும், இ.எஸ்.ஐ., பி.எஃப் மற்றும் கூலி குறித்த பல்வேறு தகவல்களை வழங்கினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதற்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொண்டது. சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ் அவர்கள் நன்றியுரை வழங்கி கூட்டத்தை நிறைவு செய்தார்.

## MADURAI RUN - 1st ANNIVERSARY CELEBRATION

கடந்த ஆண்டு சிட்கான் 2019 மாநாட்டில் புதுமையான முறையில் **மதுரை ரன்** என்ற பெயரில் மினி மாரத்தான் ஓட்டப்போட்டி நடத்தப்பட்டது. ஓராண்டு நிறைவை கொண்டாடும் வகையில், ஆன்லைன் மூலம் ஜும்பா நடன நிகழ்ச்சி கடந்த 02.08.2020 அன்று காலை 8 முதல் 9 மணி வரை ஒரு மணி நேர நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சி நெக்ஸ்ட் ஜென் அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்டது. இதில் சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தலைமைத் தாங்கினார். நெக்ஸ்ட் ஜென் அமைப்புச் செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். ஜும்பா நடன பயிற்சியாளராக திருமதி. அமுதா Professional Zumba Instructor அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

## INDEPENDENCE DAY CELEBRATION



பாரத தேசத்தின் 74ம் ஆண்டு சுதந்திர தினத்தை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகத்தில் 15.08.2020 அன்று சேம்பர் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் சமூக இடைவெளியை கடைபிடித்து கொண்டாடியது. காலை சரியாக 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் தேசிய கொடியை ஏற்றினார். தேசிய கீதம் பாடப்பட்டபின் விடுதலைப்போராட்ட வீரர்களை நினைவு கூர்ந்தனர்.

## SCC GREETING Mrs. A.R. MAHALAKSHMI



நமது சேம்பர் முன்னாள் செயற்குழு உறுப்பினர் திருமதி. A.R. மஹாலட்சுமி அவர்கள் பா.ஜ. கட்சியின் மாநில துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரை நமது சேம்பர் நிர்வாகிகள் கடந்த 08.08.2020 அன்று காலை நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். மேலும், அவரை மாநிலத் தலைவராக தேர்வு செய்த மாநில பா.ஜ.க. தலைவர் திரு. L. முருகன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டது.


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்



ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்

98430 72626
98425 72626

* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்



No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

# சல்பா இண்டஸ்ட்ரீஸ்

## வீட்டு உபயோகப் பொருட்கள்

18-ஏ, வெங்கலக்கடைத் தெரு, மதுரை - 1. போன்: 0452 4250844
63/5, விரகனூர், மகாராஜன் நகர், ராமநாதபுரம் ரோடு, மதுரை - 9.
செல்: 98945 44813

**கீழ்கண்ட வீட்டு உபயோகப் பொருட்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.**

- பினாயில் காம்பவுண்ட்
- டாய்லட் கிளினர்
- சோப் ஆயில்
- வாஷிங் லிக்யூட்
- டாய்லட் கிளீனர் (ஹார்பிக்)
- தரைசுத்திகரிப்பு ஆயில் (லைசால்)
- பாத்திரம் சுத்தம் செய்யும் ஆயில் (ப்ரில்)
- ஹாண்ட் வாஷ் லிக்யூட்
- ஆசிட் சிலர்ரி
- பிளிச்சிங் பவுடர்
- வாஷிங் சோடா
- காஸ்டிக் சோடா
- டிஸ்டில்டு வாட்டர்
- வாஷிங் பவுடர் செட்
- டிடர்ஜண்ட் பவுடர்
- ஒயிட் பினாயில்
- டிஸ்வாஸ் கேக்
- டிடர்ஜண்ட் சோப்ஸ்
- ஓம வாட்டர்
- டினோ பால்
- பாத்ரூம், டாய்லட் சம்பந்தபட்ட பொருட்கள் வாசனை திரவியங்கள் மற்றும் இதர கெமிக்கல்கள்



K.K.Karunakaran
Mobile : 98409 60844
82206 94087
Factory : 98945 44813





















## வெளிப்படையான வரிவிதிப்பு நேர்மையாளரை மதித்தல்

வரி செலுத்துவோரை ஊக்குவிக்கவும், தன்னம்பிக்கை அளிப்பதற்கும், அச்சமில்லா நிலையை ஏற்படுத்தும் நோக்கில், **வெளிப்படையான வரிவிதிப்பு – நேர்மையானவர்களை கௌரவித்தல்** என்ற புதிய தளத்தை நம் பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்த மாதம் தொடங்கி வைத்துள்ளார்.

தடையில்லாத மதிப்பீடு, தடையில்லாத மேல்முறையீடு மற்றும் வரி செலுத்துவோருக்கான சாசனம் போன்ற மிகப்பெரும் சீர்திருத்தங்களை இந்தத் தளம் கொண்டுள்ளது. தேசத்தை கட்டமைப்பதில் நேர்மையாக வரி செலுத்தவோரின் பங்களிப்புக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார். இதுபோன்ற வரி செலுத்துவோரின் வாழ்க்கையை எளிதாக்குவதே அரசின் பொறுப்பு என்றும் கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்கள், **“குறைந்த ஆட்சி, நிறைந்த நிர்வாகம்”** என்ற பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உறுதிப்பாட்டை நோக்கிய மற்றொரு நடவடிக்கை இந்தத் தளமாகும் என்று தெரிவித்துள்ளார்.

## பேட்டரி இல்லாமல் மின்சார வாகன விற்பனை - அமைச்சகம் அனுமதி

மின்சார வாகனங்களை பேட்டரிகள் பொருத்தாமலே விற்கவும், பதிவு செய்யவும் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

நாட்டில் மின்சார வாகனங்களை பயன்பாட்டுக்கு வருவதை ஊக்குவிப்பதற்கான சூழலை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சிகள் எடுத்து வருகிறது. வாகனங்களால் மாசு ஏற்படுதலைக் குறைத்தல், கச்சா எண்ணெய் இறக்குமதி செலவைக் குறைக்க வேண்டும் என்ற நாட்டின் பரந்த நோக்கத்தை எட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

அதோடு, மின்சார வாகனங்களை ஊக்குவிக்க வாகனத்தின் விலையில் பேட்டரியின் விலையை (மொத்த விலையில் 30-40% வரும்) சேர்க்கக் கூடாது என்று அமைச்சகத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பேட்டரி இல்லாமல் வாகனத்தை விற்க அனுமதிக்க வேண்டும். இதன் மூலம் வாகனத்தின் விலைகள் குறையும். பேட்டரிகளை தனியாக விற்கலாம் என்றும் பிரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உத்யம் பதிவு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, புதிய பதிவுச் சான்றிதழ் முறை அமலாகியுள்ளது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, ஜுலை முதல் தேதியிலிருந்து மத்திய அரசால் புதிதாக உத்யம் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இணையதளம் வாயிலாகப் பதிவு செய்து, பதிவு எண் மற்றும் சான்றிதழை பெற்றுக்கொள்ளலாம். இதற்கு கட்டணம் கிடையாது.

**வரும் 2021 மார்ச் 31ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும். புதிதாக பதிவு செய்யும் நிறுவனங்கள் வரும் 2021 ஏப்ரல் முதல் ஜி.எஸ்.டி., மற்றும் பான் எண்ணைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.**

## தேசிய பென்ஷன் திட்டம் பாஸ்வேர்டு மூலம் புதிய கணக்கு துவக்கலாம்

தேசிய பென்ஷன் திட்டமான, என்.பி.எஸ்.,-ல் ஒரு முறை பாஸ்வேர்டு மூலம் புதிய கணக்கை துவக்குவதற்கான எளிய வழியை, தேசிய பென்ஷன் ஒழுங்குமுறை ஆணையம் அறிமுகம் செய்துள்ளது. இந்த திட்டத்தை பரவலாக்கும் வகையில் ஆன்லைன் மூலம் என்.பி.எஸ்., கணக்கை காகித ஆவணம் இல்லாமல், மின்னணு கையெழுத்து மூலம் துவக்கும் வசதியை, அண்மையில் அறிமுகம் செய்தது.

இதன்படி, அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள், நெட் பாங்கிங் மூலம், பதிவு செய்யப்பட்ட மொபைல் போனுக்கு வரும் ஒரு முறை பாஸ்வேர்டு மூலம் புதிய கணக்கு துவக்கலாம். நெட் பேங்கிங் அல்லாத டிஜிட்டல் வழிகளில் கணக்கு துவக்க விரும்புகிறவர்கள், இ-மெயில் மற்றும் ஒரு முறை பாஸ்வேர்டு மூலம் கணக்கு துவக்கலாம். ‘நோ யுவர் கஸ்டமர்’ செயல்முறையை பூர்த்தி செய்த பிறகு, வங்கிகள் வாடிக்கையாளர் கணக்கு விபரங்களை ஆணையத்திற்கு அனுப்பி வைக்கும்.




Available in :
15kg Tin, 1 Ltr,
1/2 Ltr, 200ml,
100ml, 50ml

சாரதி®

நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in


ஒரே மாஸ்க்கை மீண்டும் பயன்படுத்தக் கூடாது


SINCE 1989
Amar Tek
INDUSTRIES
• வீட்டில் துணிகளை காய வைக்க இடம் இல்லையே என்ற கவலை இனி வேண்டாம்.
• மழை காலத்திலும் வீட்டிலேயே துணிகளை காய வைக்கலாம்.
• Stand உபயோகம் இல்லாத போது, மடக்கி வைத்து விடலாம். அதிக இடம் தேவை இல்லை.
• குடும்பத்தில் ஐந்து நபர்களுடைய துணிகளை காய வைக்க முடியும் (18 மீட்டர் உள்ளடங்கியது)
• பெண்கள் எளிதில் கையாளுவதற்கேற்ப வலுவான Steel Pipeல் வடிவமைக்கப் பட்டுள்ளது.
• குடும்பத்துடன் டூர் செல்லும் போது மடக்கி காரில் எடுத்துச் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
• மழையிலும், வெயிலிலும் துரு பிடிக்காத Powder Coating செய்யப்பட்டுள்ளது.
• No worry to dry the daily washed clothes in house.
• In rainy season also, you can dry your washed clothes in your home itself.
• You can fold the stand, when not in use, No huge place required for keeping the stand.
• The stand is more than enough to dry the washed clothes of a family having five members.
• The stand is 18 meters length entirely. Women can handle the stand very comfortably, as it is made of using sted pipe.
• It is designed in such a way, that it can be taken anywhere, in case of trips, by keeping it in car.
• The powder coating, makes the stand rust free in both rainy and summer season.
• धोया कपड़ा सुखाने का अब कोई चिंता नही।
• बरसात के मौसम मे भी आप अपने घर मे ही धोया कपड़ा सुखा सकते है।
• आप स्टैंड को मोड़ सकते है, जब उपयोग मे नहीं आये । कोई बहुत बड़ी जगह रखने के लिए आवश्यक नहीं है।
• स्टैंड किसी एक परिवार के पाँच सदस्यों के धोये हुए कपड़े सुखाने के लिए पर्याप्त से आधिक है।
• स्टैंड की लंबाई पूरी तरह से 18 मिटर है।
• महिलायें इसे बहुत आराम से संभाल सकते है, ये स्टील पाइप से बना होता है।
• यह इस तरह से बनाया गया है कि यात्राओं के मामले मे, कार मे रखकर इसे कहीं भी ले जाया जा सकता है।
• पाउडर कोटिंग स्टैंड को बारिस और गर्मी के मौसम में जंग रहित बनाती है।
Amar Tek Industries
South India
Cloth
Dryer Stand
MRP
₹1800/-
Safe Hands
Amar Tek
HAND SANITIZER STAND
SINCE 1989
EXECUTIVE
SMART
WALL MOUNTING
Hand Pressing
MANUAL FOOT PEDAL HAND SANITIZER STAND
Sales Office
4/726, Vandiyur Main Road,
Near Tagore School,
Madurai - 625 020.
Email : amartek1959@gmail.com
Factory
4/643, Vandiyur Main Road,
Satha Siva Nagar, Madurai-625020.
Mobile : 0452-6454030
Cell : 9244403917, 9244203917

# NEXTGEN PROGRAMS

## KNOW OUR MEMBERS

இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பான NEXTGEN அமைப்பில் உள்ள உறுப்பினர்கள் அறிமுக நிகழ்ச்சி கடந்த 18.07.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் Zoom Video செயலியில் ஏற்பாடு செய்திருந்தது.

இதில், Homoeopathy The Sweet Pills for Good Health என்ற தலைப்பில் Dr. மதுமிதா, Dr. Madhu's Homoeo Care அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அவரைத் தொடர்ந்து, Industrial Dyes and Chemical Online Coaching Classes என்ற தலைப்பில், திரு. செந்தில் நாராயணன் & திருமதி. நந்தினி செந்தில், M/s. Narayana Color Company அவர்கள் கலந்து கொண்டு விளக்கமளித்தார். இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

## KNOW YOUR MEMBERS

இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பான NEXTGEN அமைப்பில் உள்ள உறுப்பினர்கள் அறிமுக நிகழ்ச்சி கடந்த 01.08.2020 அன்று மாலை 6.30 மணி அளவில் Zoom Video செயலியில் ஏற்பாடு செய்திருந்தது.

இதில், Build Your Sweet Home என்ற தலைப்பில் திரு. யோகேஷ் திருக்கொண்டா, Director, Energy Livingscapes அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அவரைத் தொடர்ந்து, Ayurveda: Life, Health and Longevity என்ற தலைப்பில் Dr. பிரசன்ன குமார், M/s. Prarthana Ayurveda Health Centre அவர்கள் கலந்து கொண்டு விளக்கமளித்தார்.

இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார்.

## SUCCESS MANTRAS

இளைய தலைமுறை தொழில்முனைவோர் கூட்டமைப்பு – NEXTGEN, இளைய / புதிய தொழில்முனைவோர்களை ஊக்குவிப்பதற்காகவும், தொழில் வெற்றிக்கான அடித்தளத்தை அறிந்து கொள்வதற்காகவும் **SUCCESS MANTRAS** என்கிற தலைப்பில், தொழிலில் வெற்றி பெற்ற / தொழில் முன்னோடிகளை சிறப்பு விருந்தினராக அழைத்து கூட்டத்தை நடத்தி வருகிறது.

முதன்முறையாக நடத்தப்படும் இந்த கூட்டத்தில், சிறப்பு விருந்தினராக ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவரும், குவாலிட்டி நிட் வியர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனருமான திரு. குமரன் B. ஜகுவா அவர்கள் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சி 25.07.2020 அன்று ஜும் செயலியில் நடைபெற்றது.

நெக்ஸ்ட் ஜென் அமைப்பின் உறுப்பினர்கள் பலரின் கேள்விகளுக்கு மிக அருமையாக பதிலளித்தார். நேர்மையே தமது வெற்றியின் அடித்தளம் என்று மிகத்தெளிவாக கூறினார்.

இந்த கூட்டத்திற்கு NEXTGEN தலைவர் திரு. T.M. ருபேஷ் பாபு அவர்கள் தலைமைத் தாங்கினார். கூட்டத்தை NEXTGEN செயலாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் ஏற்பாடு செய்தார். திரு. N.G. செந்தில் குமார் அவர்கள் Moderator ஆக செயல்பட்டார்.


## டிஜிட்டல் மார்க்கெட்டிங் மூலம் உங்கள் Products and Services விளம்பரம் செய்வதற்கு

**ஸௌராஷ்ட்ரா சேம்பர் ஆப் காமர்ஸ்** மற்றும் **IMEX BUSINESS SOLUTIONS** இணைந்து நமது சேம்பரில் உள்ள ஒவ்வொரு வணிகர்களுக்கு ஒரு **Online Business Web Page** செய்து கொடுக்கிறோம். நமது சேம்பர் உறுப்பினர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். கீழ்கண்ட ஆவணங்களை குறிப்பிட்ட மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- உங்கள் நிறுவனத்தைப்பற்றி விபரத்தை 30 வரிகளில் தமிழ் / ஆங்கிலத்தில்.
- உங்கள் நிறுவனத்தின் முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் வாட்ஸ்ஆப் எண்.
- உங்கள் நிறுவனத்தின் facebook, linkedin, twitter, pinterest & youtube சமூக வலைதள URL முகவரிகள்.
- கூகுளில் உங்கள் வணிகத்தைப்பற்றி தேடும் முக்கிய ஐந்து சொற்கள்.
- உங்கள் நிறுவனம் / தொழிற்சாலை / அலுவலகம் / வேலை பார்க்கும் இடம் / விருது பெற்ற மற்றும் விருது வழங்கியது போன்ற 6 முதல் 10 புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள்.

தங்கள் ஆவணங்களை அனுப்ப வேண்டிய முகவரி

இ-மெயில் முகவரி : premnathrk@gmail.com & sourashtra.chamber@gmail.com
வாட்ஸ்ஆப் எண் : 80566 56889 / 93441 97952

Only **Rs. 365/-** Per Year

*Please Visit:* **www.laabhmart.org**




http://www.laabhmart.org/



மும்மொழிக் கல்வி மற்றும் பன்முகத் திறனை கொண்ட மாணவ சமுதாயத்தை உருவாக்கக் காத்திருக்கும்

# புதிய கல்விக் கொள்கை 2020

– B.S. ஜெனார்த்தனன்

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வலுவல கால வகையி னானே

முற்காலத்து வழங்கப்பட்ட சில இலக்கண முறைகள் பிற்காலத்தில் வழக்கொழிந்து போவதும், முற்காலத்து வழங்கப்படாத சில இலக்கண முறைகள் பிற்பாலத்து வழங்கப்படுவது குற்றமன்று என்பதே பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட இலக்கண நூலான நன்னூலின் பொருள். இதன் அடிப்படையில் பழையப் பாடக்கொள்கைகளில் உள்ள முறைகளை மாற்றி, புதிய கல்விக்கொள்கையினை ஏற்பது தான் நமது இளைய பாரத சமுதாயத்திற்கு ஏற்றது. இந்த உலகில் நிரந்தரமாக இருப்பது மாற்றம் ஒன்று தான். ஏனெனில் மாற்றம் ஒன்று தான் மாறாதது. அந்த அடிப்படையில் புதிய கல்விக் கொள்கை நாட்டின் உண்மை நிலையை ஆராய்ந்து தேவையான தருணத்தில் சிறந்த வல்லுநர்களால் மிகச்சிறப்பாக மாற்றி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய கல்விக்கொள்கையால் வரும் காலத்தில் நமது நாட்டின் முதுகெலும்பாக நமது மாணவ சமுதாயம் அமையும் என்பது திண்ணம்.

இந்திய சுதந்திரத்திற்கு முன் தோன்றி மறைந்த மகாகவி பாரதியார் அப்போதைய சூழலில் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்ற காரணத்தினாலும், கல்விக்கு நிகர் கல்வியே என்ற அடிப்படையிலும் கனிச்சோலைகள் செய்வதைவிட, நீர் தேவைக்கு ஆழ்த்துளை கிணறு அமைப்பதை விட, அனைவரும் இலவசமாக உணவு உண்பதற்காக அன்னச்சத்திரம் கட்டுவதை விட, மனம் அமைத்துக்கு ஆலயங்கள் அமைப்பதை விட, ஒரு ஏழை மாணவருக்கு கல்வி கிடைக்கச் செய்தால் கோடி புண்ணியம் கிடைக்கும் என்று இப்பாடல் மூலம் அரிதியிட்டு எழுதியுள்ளார்.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்...

சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் அரசு மற்றும் பல்வேறு சமூகங்கள் தங்கள் சமூகத்திற்கான பள்ளி, கல்லூரிகளை நிறுவி மாணவர்களுக்கு தேவையான கல்வியினை வழங்கி வருகின்றன. ஆனாலும், தற்போதும் ஏழைகள் இருக்கத் தான் செய்கின்றனர். இங்கு ஏழைகள் என்று குறிப்பது பணத்தால் அல்ல அறிவினால் படிப்பறிவு இல்லை என்றாலும் அவன் ஏழை தான்.

புதிய கல்விக்கொள்கை – 2019ல் கல்வி அறிவோடு சேர்த்து வாழ்க்கைக்கு தேவையான தொழிற்கல்வி அறிவையும் மாணவர்கள் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் டாக்டர் கஸ்தூரிரெங்கன் மற்றும் அவர்களது குழுவினரால் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது.

கல்வியின் அடிப்படைத் தன்மை என்பது நிறைவான மனித ஆற்றல், சமத்துவ பொதுச் சமுதாயம் மேம்படுத்துதல், நாட்டின் வளர்ச்சியை அதிகப்படுத்துதல் ஆகும். தரமான கல்வி அனைவருக்கும் கிடைக்க செய்தால் நமது நாட்டின் வளர்ச்சி, உலக அரங்கில் பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, சமத்துவம், அறிவியல் மேம்பாடு, தேசிய ஒருமைப்பாடு, கலாச்சார பாதுகாப்பு ஆகியவை வளர வழிவகை செய்யும்

**புதிய கல்விக்கொள்கையின் சிறப்பம்சங்கள் - பள்ளிக் கல்வி.**

இந்தக் கொள்கையானது தற்போது பள்ளிக் கல்வியில் உள்ள 10+2 என்ற கட்டமைப்பை மாற்றி, புதிய கற்றல் முறை மற்றும் 5+3+3+4 பாடத்திட்டமாக மறுகட்டமைத்து, 3-18 வயதான குழந்தைகளுக்கு வழங்க விழைகிறது.

5 என்பது ப்ரீ.கே.ஜி, முதல் 2ம் வகுப்பு வரை
3 என்பது 3ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை
3 என்பது 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை
4 என்பது 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை

**முதல் 5 என்பது 3 வயது முதல் 8 வயது வரை ப்ரீ.கே.ஜி, முதல் 2ம் வரை:**

ஒரு குழந்தையின் ஒட்டு மொத்த மூளை வளர்ச்சியில் 85 சதவீதம் 6 வயதிற்குள் நிகழ்கிறது. அப்பருவத்தில் சரியான கற்றல் முறையை வகுத்து முறையான கற்றலை மேற்கொண்டால் அடுத்து வரும் கல்வி நிலையில் அவர்களின் கற்றல் திறன் மேம்படும் என்ற முறையில் புதிய கல்விக்கொள்கை உள்ளது. ஒரு மாணவன் மூன்றாம் வகுப்புக்கு செல்லும் போது வாசித்தலும், கணிதத்திலும் அடிப்படைத் திறன் முழுமையாக பெற்றிருக்க வேண்டும்.

**இரண்டாவதாக வரும் 3 என்பது 8 முதல் 11 வயது வரை - 3ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை:**

வாசித்தல் எழுதுதல் மற்றும் எண்களின் அடிப்படை செயல்பாடு, செய்யும் திறன் பெறுதல் என்பது எதிர்கால பள்ளிக் கல்வி மற்றும் வாழ்நாள் கற்றலுக்கு அடிப்படையானதும் அவசியமானதும் ஆகும். அதனால் தான் வள்ளுவரும், ஔவையாரும் எண்ணும் எழுத்தும் கண் போன்றது குறிப்பிட்டுள்ளனர்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் - ஔவையார்

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு
(அதிகாரம்: கல்வி. குறள் எண்: 302)

எண்ணும், எழுத்தும் தெரியாமல் ஒருவர் இருந்தால் கண் இருந்தும் குருடர், காது கேட்டாலும் செவிடர் என்ற நிலைதான். தற்போதைய கல்விக்கொள்கையில் ஒரு மாணவன் தனது தாய்மொழி சரிவரத் தெரியாமல் கல்லூரிப் படிப்பை முடித்துவிட முடியும். அதனை மாற்ற புதிய கல்விக்கொள்கையில் 5ம் வகுப்பு வரை தாய் மொழியில் பாடங்களைக் கற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் விரும்பினால் 8ம் வகுப்பு வரை தாய் மொழியில் பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.



**மூன்றாவதாக வரும் 3 என்பது 11 முதல் 14 வயது வரை - 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை:**

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ?

என்று நாமக்கல் கவிஞரின் கூற்று நினைவுக்கு வரும் வகையில் மிகவும் அற்புதமாக 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு உள்ளூரின் திறன் மற்றும் தேவைகளுக்கேற்ப மாநிலங்களாலும், உள்ளூர் சமூகங்களாலும் குறித்துக் கொடுக்கப்பட்ட கைவினைத் தொழில்களான, தச்சு வேலை, மின் வேலை, உலோக வேலை, தோட்ட வேலை, மட்பாண்டங்கள் செய்தல், நுண் கலைகள், கைவினைக் கலைகள் மற்றும் இன்னபிற தொழில் தேவைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பயிற்சிப் பாடங்களாக கற்றுக்கொள்ள வழி வகை செய்கிறது.

விடுமுறை காலங்களிலும், மேல்நிலை படிப்பு காலங்களிலும் மாணவர்கள் அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப அந்தந்த வல்லுநர்களிடம் தொழில்களில் பயிற்சி பெறும் வகையில் பாடத்திட்டம் இருக்குமாறு வடிவமைக்கப்படுகிறது.

**நான்காவதாக வரும் 4 என்பது 14 முதல் 18 வயது வரை - 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை:**

நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்நின்று
பண்புஅறிந்து ஆற்றாக் கடை
- குறள்: 469

அவரவரது இயல்புகளைத் தெரிந்து கொண்டு, அவரவர்களுக்குத் தகுந்தபடி செய்யாவிட்டால், நன்மை செய்வதிலும் கூடக் குற்றம் உண்டாகிறது. என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப தற்போதைய மாணவர்களின் இயல்பான திறன்களைக் கண்டறியப்பட்டாலும் அதனை செயல்படுத்துவதில் நடைமுறை சிக்கலில் இருந்து விடுதலை

## புதிய கல்விக் கொள்கையில்
## ஸௌராஷ்ட்ர மொழிக்கு வாய்ப்பு

**ஸௌராஷ்ட்ர மொழி, கற்றுக்கொடுக்க உகந்த தருணம்:** புதிய கல்விக்கொள்கை அறிக்கை 4.11 என்ற பத்தியில் **வீட்டு மொழி** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நம் சமூக குழந்தைகள் இந்தியாவின் எந்த மாநிலத்தில் இருந்தாலும் அவர்கள் விரும்பினால் நமது தாய் மொழியான ஸௌராஷ்ட்ர மொழியைக் கற்றுக்கொள்ள அருமையான வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த அரிய வாய்ப்பினை நம் சமூக மக்களும், கல்வி நிறுவனங்களும் முன் எடுத்து நடைமுறைப் படுத்தி நமது வருங்கால சந்ததியினரையாவது நமது மொழியை எழுதிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றுத் தர வேண்டும்.




வழங்கியுள்ளது இப்புதிய கல்விக்கொள்கை.

அதாவது, 11ம் வகுப்பில் விருப்பப் பாடத்தை தேர்ந்தெடுப்பதிலும் ஒரு வரையறைக்கப்பட்ட பாடத்திட்டமாக இதுவரை இருந்தது. அதனை தற்போது 9ம் வகுப்பு முதல் வரையறை இல்லாத விருப்பப் பாடத்தை மாணவர்களே தேர்ந்தெடுத்து படிக்கும் வாய்ப்பு தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

தெரிந்த இனத்தோடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்

- குறள்: 462

தாம் தேர்ந்து கொண்ட நிர்வாகச் சுற்றத்தோடு ஒரு செயலை ஆராய்ந்து திட்டமிட்டு செய்பவருக்கு செய்ய முடியாத செயல் என்று ஏதுமில்லை என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க இப்புதிய கல்விக்கொள்கையினால் மாணவர்கள் அவரவர்கள் விரும்பியப் பாடங்களைத் தேர்ந்தெடுத்து படிக்கும் வாய்ப்பு உண்டாகிறது. இதனால், மாணவர்களின் கற்றல் திறன், செயல்திறன் நன்றாக வளர வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

**உயர்கல்வி:**

**இந்திய உயர் கல்வி அமைப்பிற்கான ஒரு புதிய மற்றும் முற்போக்கு பார்வை:** மாணவர்களுக்கு மேம்பட்ட கல்வி அனுபவத்தை வழங்கும் விதமாக, பாடத்திட்டம், கற்பிக்கும் முறைகள், தேர்வு முறைகள் மற்றும் மாணவர்களுக்கான கல்வி உதவிகள் ஆகியவற்றைச் சீரமைத்து பலதரப்பட்ட இயல் சார் இளநிலைப்பட்டப்படிப்பினை நோக்கி நகர்தல் என பல அம்சங்கள் நிறைந்துள்ளது உயர்கல்வி. இளநிலை பட்டப்படிப்புகளுக்கான கட்டமைப்பு மற்றும் கால அளவு 3 அல்லது 4 ஆண்டுகளாக இருக்கும். இந்த காலத்திற்குள் ஒரு மாணவன் எந்த கட்டங்களிலும் உள்நுழையவும் மற்றும் வெளியேறவும் முடியும் விதமாக வடிவமைத்துள்ளது மிகவும் அருமையான திட்டமாகும்.

- முதல் ஆண்டு முடித்தவர் வெளியேற விரும்பினால் சான்றிதழ்
- இரண்டு ஆண்டுகள் முடித்தவர் வெளியேற விரும்பினால் பட்டயச் சான்றிதழ்
- மூன்றாம் ஆண்டு முடித்தவர் வெளியேற விரும்பினால் இளநிலைப் பட்டம்
- தேர்வு செய்த முக்கியப் பாடத்தில் ஆராய்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் ஆராய்ச்சியுடன் கூடிய நான்காண்டு இளநிலைப்பட்டம் வழங்கப்படும்.
- மூன்றாண்டுகள் இளைநிலைப் பட்டப்படிப்பை முடித்தவர்களுக்கு இரு ஆண்டுகள் கூடிய முதுநிலைப் பட்டப்படிப்பு. இதில் இரண்டாம் ஆண்டு முழுவதுமாக ஆராய்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்படும்.
- ஆராய்ச்சியுடன் கூடியதான நான்காண்டு இளநிலைப் பட்டம் முடித்த மாணவர்களுக்கு ஒரு ஆண்டு உள்ள முதுநிலைப்பட்டம் இருக்கும்.
- ஒருங்கிணைந்த 5 ஆண்டு இளங்கலை அல்லது முதுநிலை திட்டம் இருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.
- முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புக்கு, முதுநிலைப் பட்டம் அல்லது 4 ஆண்டு ஆராய்ச்சியுடன் கூடிய இளநிலைப்பட்டம் தேவைப்படும்.
- ஆய்வில் நிறைஞர் படிப்பு M.Phil நிறுத்தப்படும்.

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு

- குறள்: 595

நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும். மக்களின் ஊக்கத்தை அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு என்ற வள்ளுவரின் வாக்கின்படி மாணவர்கள் கற்றுக்கொள்ளும் அளவில் அவர்களின் உயர்வு இருக்கும் என்ற அடிப்படையில் பயன்தரும் வகையில் கல்விக்



கொள்கையை கொண்டுள்ளது இப்புதிய கல்விக்கொள்கை.

**புதிய கல்விக்கொள்கையின் அடங்கிய சிறப்பம்சங்கள்:-**

- தாய்மொழியில் பாடங்களைக் கற்றுக்கொள்வதால் மாணவர்களின் புரிதல் திறன் அதிகரிக்கும்.
- மூன்றாம் வகுப்புக் வரும்போது வாசித்தலிலும் கணிதத்திலும் அடிப்படைத் திறனை முழுமையாக பெற்றிருத்தல்
- மாணவர்கள் அவரவர் விருப்பம், திறன், ஆர்வம் ஆகியவற்றிற்கேற்ப தங்களுடைய கற்கும் வேகத்தையும் கல்விப் பாதையையும் தேர்ந்தெடுக்கும் விதமாக அமைந்திருப்பது.
- கற்றுக்கொள்ள விரும்பும் மொழியை தானே தேர்ந்தெடுத்தல்
- ஆரம்பம் முதலே மூன்று மொழியைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு
- மேல்நிலை வகுப்பில் இந்திய மொழியோடு வெளிநாட்டு மொழிகளும் தேர்ந்தெடுத்து படிக்கும் வாய்ப்பு
- ஆறாம் வகுப்பு முதல் இருக்கும் இடத்தின் முக்கிய தொழில்களுடன், மின்துறை, கணினி கோடிங், பாரம்பரிய தொழில்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு
- 9ம் வகுப்பு முதல் விரும்பிய பாடத்தைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு
- பாரம்பரிய கலை, தொழில், விளையாட்டு, இலக்கியம் ஆகியவை கல்வியோடு சேர்ந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்பு.
- கணிதம் மற்றும் கணக்கீட்டுத் திறன்களை வளர்ப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்.
- குறியீட்டியலை உள்ளடக்கிய செயல் வழிக்கற்றல் பாடத்திட்டங்கள் இடைநிலை கல்வித்திட்டத்திலிருந்து அறிமுகம் செய்தல்.
- இந்தியாவைப் பற்றிய பண்டைய மற்றும் நவீன இந்தியாவிற்கு பண்டைய இந்தியா அளித்த பங்களிப்புகளை பற்றயிதாகவும், அதன் பங்களிப்புகள், போராட்டங்கள், கல்வி பற்றிய எதிர் காலக் கனவும் மற்றும் பிற காரணிகளை உள்ளடக்கிய கல்வி.
- கணிதம், வானியல், தத்துவம், யோகம், கட்டிடக்கலை, மருத்துவம், விவசாயம், பொறியியல், இலக்கியம், தனி நபர் மற்றும் குழு விளையாட்டுகள், உடல் மற்றும் மனத்திறன், தனி நபர் விளையாட்டுகள், குழு விளையாட்டுகள், நிர்வாகம், அரசியல், இயற்கைப் பாதுகாப்பு உள்ளிட்ட பாடங்களை உள்ளடக்கிய இந்திய ஞான, பழங்குடி அறிவு, மரபு சார்ந்த அறிவு மற்றும் பாரம்பரியக் கற்றல் முறைகள் மூலம் கற்பித்தல்.
- பழங்குடி இன மருத்துவ நடைமுறைகள், வன மேலாண்மை, பாரம்பரிய கரிம பயிர் சாகுபடி, இயற்கை வேளாண்மை போன்ற படிப்புகளும் கிடைத்தல்
- ஒரு மொழியைக் கற்றால் குறிப்பிட்ட மாநிலத்தில் தான் வேலை வாய்ப்பு என்பதனைத் தகர்த்து இந்தியா முழுவதிலும் வேலை வாய்ப்பு உருவாக்குதல்.

**புதிய கல்விக் கொள்கை எதிர்நோக்கி இருக்கும் சிக்கல்கள்-**

- சமமான, தரமான கல்வியை நாட்டின் கடைநிலை கிராமங்கள் வரை கொண்டு செல்வதில் உள்ள நடைமுறை சிக்கல்
- தேவையான, திறமையான ஆசிரியர்களை உருவாக்கி அவர்களுக்கு போதிய பயிற்சி கொடுப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் கட்டமைப்பு புதிய கல்விக்கொள்கைக்கு ஏற்றாற்போல் மாற்றுவது.
- மாணவர்களின் திறன்களைக் கண்டறிவதில் மாநில அரசுகளின் ஒத்துழைப்பு, ஆசியர்களின் பங்களிப்பு போன்றவற்றை நடைமுறைப்படுத்துதல்

மேற்கூறிய குறைகளையும் நடைமுறை சிக்கல்களையும் நீக்கிவிட்டால் நிச்சயமாக வளமான, வலிமையான, உறுதியான பாரதம் உருவாகும் என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

- குறள்: 396

என்ற வள்ளுவரின் வாக்கின்படி மாணவர்களிடையே புதைந்துள்ள திறமைகளை மிக எளிதாக வெளி உலகத்திற்கு கொண்டுவரும் ஒரு புதிய அத்தியாயம் படைக்க காத்திருக்கும் திறவுகோல் தான் இப்புதிய கல்விக்கொள்கை.




O.V.K. பாஸ்கரன்

தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...
ரிஜென்சி டிரேடிங் கம்பெனி
5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை-625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051
அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்


V.K. ஜெயசங்கர்

# தொழில் ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளுக்கு ஒற்றைச் சாளர முறை விரைவில் அமைக்கப்படவிருக்கிறது




நாட்டிலுள்ள தொழில்களின் ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளுக்கு ஒற்றைச் சாளர முறையை அரசு விரைவில் அமைக்கவிருக்கிறது. அரசு நிதியங்கள், அயல்நாட்டு ஓய்வூதிய நிதிகள் மற்றும் இதர தரப்பினரிடம் இந்திய உள்கட்டமைப்புத் துறையில் தொழில் மற்றும் முதலீடுகள் செய்வது எளிதாக்கப்பட்டிருப்பதைப் பற்றிப் பேசிய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், உண்மையான ஒற்றைச் சாளரமாக இது இருக்கும் என்றும், தொடர்புடைய அனைத்து மாநில அரசுகளும், மத்திய அமைச்சகங்களும் இந்த அமைப்பில் உள்ளடக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

நில வங்கி ஒன்றை அமைப்பதற்கு அரசு பணியாற்றி வருவதாகவும், ஆறு மாநிலங்கள் ஏற்கனவே தங்களது ஒப்புதலை இதற்கு வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இதன் மூலம், முதலீடு செய்ய விரும்புவோர் நிலை உரிமையாளர் முகமைகளுக்கு அடிக்கடி வந்து செல்லும் தேவையில்லை. தொலைவில் உள்ள தங்களது அலுவலகங்களில் இருந்தே நில வங்கிகளை கண்டறிய முடியும் என்று தெரிவித்தார்.

தொழில்கள் மற்றும் முதலீடுகளின் ஒப்புதல்களை மேலும் எளிமையாக்குவது மற்றும் துரிதப்படுத்துவது குறித்து பேசிய அவர், பல்வேறு தொழில்களின் யோசனைகள் மற்றும் திட்டங்களின் மீது முடிவெடுப்பதற்காக, அமைச்சரவைச் செயலாளர் தலைமையிலான செயலாளர்களின் அதி சாரம் பொருந்திய குழுவை அமைக்க அமைச்சரவை எடுத்துள்ள சமீபத்திய முடிவுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மத்தியத் துறையிலும் தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதாவும், முதலீடுகளைக் கொண்ட திட்டங்களின் வளர்ச்சிக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளிடையே ஒருங்கிணைப்புக்காகவும், இந்தியாவுக்கு முதலீடுகள் ஈர்க்கும் திட்டங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அயல்நாட்டு முதலீடு உள்ளே வருவதை அதிகரிக்க திட்ட வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கவனம் செலுத்துவதற்காக 12 தொழில் துறைகள் அரசு முதலில் கண்டறிந்ததாக தெரிவித்த அமைச்சர், பின்னர் அது 20 ஆக அதிகரிக்கப்பட்டதாகக் கூறினார். முதலீடுகளை அதிகரிக்கவும், நாட்டின் போட்டியிடும் திறனை மேம்படுத்தவும், இது உதவும்.

நிலையான மற்றும் சிறப்பு சாமான்கள், குளிர் சாதனங்கள், தோல், காலணி, வேளாண் – ரசாயனங்கள், உண்ணத் தயார் நிலையில் உள்ள உணவுகள், எஃகு, அலுமினியம், செம்பு, ஜவுளி, மின்சார வாகனங்கள், வாகன உதிரிபாகங்கள், தொலைக்காட்சி செட்டாப் பாக்ஸ், சிசிடிவிக்கள், விளையாட்டுச் சாமான்கள், எத்தனால் தயாரிப்பு மற்றும் உயிரி – எரிபொருள்கள் மற்றும் பொம்மைகள் ஆகிய துறைகள் இதில் அடங்கும்.

தற்சார்பு பாரதம் என்றால் உலகத்துக்கான தனது கதவுகளை இந்தியா மூடுவதாக அர்த்தமில்லை என்று கூறிய அவர், மாறாக, இந்தியப் பொருள்களின் தரம் மீதான கவனத்தோடும், இந்தியத் தயாரிப்பின் பொருளாதார அளவை அதிகரிக்கும் நோக்கத்துடனும், வாய்ப்புகள் மற்றும் முதலீடுகளுக்கான கதவுகளை விரிவுபடுத்தியிருப்பதாகத் தெரிவித்தார். வலிமையான நிலையில் இருந்து, அதிகப் போட்டித் திறனுடன், சிறந்த தொழில்நுட்பம் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி உலகத்தை இந்தியா கையாளும்.

செயற்கை நுண்ணறிவு, தகவல் பகுப்பாய்வு, மனித உருக்கொண்ட தானியங்கியல் ஆகியவற்றை தொழில்துறை கிரகித்துக் கொள்ள வேண்டும். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதென்பது வேலை வாய்ப்புகளை குறைப்பதாகாது என்று தெரிவித்த அவர், நாட்டின் தயாரிப்பு அதிகரித்தால் அதிக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றார்.

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

அனைவரும் பயன்படுத்தக்கூடிய கதவின் கைப்பிடி, தொலைபேசி போன்ற பொருட்களை கிருமி நாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

# கிஃப்ட் பெற்றால் வரி செலுத்த வேண்டுமா?



பன்முகத்தன்மை கொண்ட பண்டிகைகள் நிறைந்த நமது இந்திய பண்பாட்டில், விழாக்கள், விருந்துகளுக்கு பஞ்சமே இருந்ததில்லை. கொரோனா காலம் தவிர, மாதந்தோறும் பண்டிகைகள், இல்லந்தோறும் விழாக்கள் இருப்பதுண்டு. பிறப்பு முதல் இறப்பு வரை, ஜாதி, மதம், மாநிலங்களுக்கு ஏற்ப சடங்குகள் இருக்கின்றன. அதில் செய்முறைகள் உண்டு. நகையாக, பணமாக, பொருளாக, கார்கள், வீடுகள், நிலம் என பரிசளிப்பது உண்டு. எந்த விழா நோக்கம் இல்லாவிட்டாலும், நமது மாவட்டங்கள் சிலவற்றில், மொய் விருந்து நடப்பதும் பழக்கத்தில் இருந்து வருகிறது.

பொது ஜனங்களுக்கே இத்தனை மொய் வாய்ப்புகள் என்றால், பிரபலங்கள், முக்கிய புள்ளிகள், அரசியல் தலைவர்களை பற்றி கேட்கவே வேண்டாம். பரிசுப்பொருள் குவியும் பல நேரங்களில் பரிசுப்பொருளாக வந்ததற்கு, சரியாக கணக்கு சொல்லவில்லை என்று, பிரபலங்கள் வழக்குகளை சந்தித்ததும் கூட நடந்ததுண்டு. இப்படி வந்து குவியும் பரிசு பொருட்களுக்கும் வரி செலுத்த வேண்டும் என்பது குறித்து, உங்களுக்கு தெரியுமா? அதுபற்றி காண்போம்.

**வெகுமதி ஒரு வருமானமா?:** ரூ. 50 ஆயிரத்துக்கு மேல், ஒரு நபரிடம் இருந்து ஒருவர், பொருளாகவோ அல்லது ரொக்கமாகவோ அன்பளிப்பு பெற்றிருந்தால், அந்த அன்பளிப்பு வருமானமாக கருதப்பட்டு, அதற்கு வரி செலுத்த வேண்டும். ஆனால், ரத்த சொந்தங்களிடமிருந்து பெற்ற பணத்துக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அது, அசையும் அல்லது அசையா சொத்தாகவோ இருக்கலாம். ஆனால், அதன் மதிப்பு ரூ. 50 ஆயிரத்துக்கும் அதிகமாக இருந்தால், வருமான வரிச்சட்டத்தின் படி, அதற்கு வரி செலுத்த வேண்டும். தவிர, சொத்தின் மார்க்கெட் விலையை விட குறைவாக விற்றால், அதற்கிடையே உள்ள வித்தியாசம் வருமானமாக கருதப்படும்.

உதாரணமாக, ரூ. 50 லட்சம் ஸ்டாம்ப் டியூட்டி மதிப்புள்ள சொத்தை, ரூ. 30 லட்சத்துக்கு விற்றால், மீதமுள்ள, ரூ. 20 லட்சம் வெகுமதியாக கணக்கிடப்பட்டு வரி செலுத்த நேரிடும். முதன்முதலில், இந்தியாவில், 1958ல் வெகுமதி வரிச்சட்டம் (ஜி.டி.ஏ.) அமல்படுத்தப்பட்டது. 1998ல் இந்தச் சட்டம் நீக்கப்பட்டது. 2004ம் ஆண்டு பல வரிச் சீர்த்திருத்தங்களுடன் மீண்டும் உயிர் பெற்றது.

**யாரின் பரிசுகளுக்கு வரி விலக்கு?:** உங்களுடைய மனைவி, உங்களுடைய சகோதர, சகோதரிகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்துணை. உங்கள் மனைவியின் சகோதர, சகோதரிகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்துணை. உங்களின் அல்லது உங்கள் வாழ்க்கைத்துணையின் நேரடியான உறவுமுறை (பெற்றோர், தாத்தா, பாட்டி, குழந்தைகள், பேரப்பிள்ளைகள்) அல்லது வழித்தோன்றல்கள் (குழந்தைகள், பேரப்பிள்ளைகள்).

**என்னென்ன அன்பளிப்புகளுக்கு வரியில்லை?** திருமணத்தின்போது பெறும் அன்பளிப்புகள். வரையறுக்கப்பட்ட உறவினர்களிடமிருந்து பெறும் அன்பளிப்புகள். உயில் வாயிலாக பெறப்படும் பூர்வீக சொத்துகள். என்.ஆர்.ஐ., கணக்கு வாயிலாக, வெளிநாடுவாழ் இந்தியர்கள், தங்கள் பெற்றோருக்கு அளிக்கும் அன்பளிப்பு. அன்பின் அடிப்படையில் எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் தரப்படும் வெகுமதி, வரிக்கு உட்படாதது. ஆனால், அது வருமான வரிச்சட்டத்தின் வரையறுக்கப்பட்ட உறவுகளாக இருக்க வேண்டும்.

**திருமணத்துக்கு முன், பின்... :** உதாரணமாக, சீனிவாஸ் என்பவரின் திருமணத்திற்கு, அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து, ரூ. 10 லட்சத்துக்கு மேல் அன்பளிப்பு பெற்றிருந்தாலும், அதற்கு வெகுமதி வரி செலுத்த வேண்டியதில்லை. மேலும், சீனிவாஸ், அவரது மனைவிக்கு ரூ. 5 லட்சம் மதிப்புள்ள வைர நெக்லஸ் பரிசாக வழங்கினால், அதற்கு வரியுண்டா என்றால், இல்லை. ஆனால், அதுவே, திருமணத்துக்கு முன் அவரது வருங்கால மனைவிக்கு அன்பளிப்பு வழங்கியிருந்தால், அது வருமானமாக கருதப்பட்டு அதற்கு வரி செலுத்த வேண்டும். ஏனென்றால், திருமணத்துக்கு முன், இவர்கள், உறவு என்ற வரையரையின் கீழ் வரமாட்டார்கள்.





PG India
Lilly Inskirts (100 plus colours available)
& Nighties manufacturers
50.South Masi St,Madurai-1.
(M)8072639441,0452-4963232
for online shopping visit: https://www.pgindia.in

P.R.CHANDRASEKARAN P.C.MYTHILI

ரொக்கம் அல்லாத அன்பளிப்புகளான, அசையா சொத்து நிலம் அல்லது கட்டடம், பங்குகள் மற்றும் எந்தவொரு கலைப்படைப்பும், அன்பளிப்பு பெறப்பட்ட தேதியில், அவற்றின் நியாயமான சந்தை மதிப்பு (எப்.எம்.வி) அடிப்படையில், அவற்றிற்கு வரி விதிக்கப்படும். அசையா சொத்தை (அதாவது, நிலம் அல்லது கட்டடம்) பரிசளித்தால், சொத்தின் முத்திரை வரி மதிப்பு, ரூ. 50 ஆயிரத்தை தாண்டினால், அத்தகைய சொத்து, போதுமான பரிசீலிப்பு இல்லாமல் பெறப்பட்டால், பெறுபவர் வருமான வரி செலுத்த வேண்டும்.

**வரி கொடுப்பவருக்கா? பெறுபவருக்கா?:** தற்போதைய சட்டப்படி, வெகுமதி பெறுபவர்கள் தான், வருமானமாக கருதி அதற்கு வரி செலுத்த வேண்டும். இதை வரிச்சட்டப் பிரிவு, 56ன் கீழ் பிற வருமானம் என்ற தலைப்பில், வரி விதிக்கக் கூடிய வருமானத்தின் ஒரு பகுதியாக கருதப்பட வேண்டும். அன்பளிப்பு பெறுபவர், தமது ஆண்டு வருமானத்துடன் அன்பளிப்பையும் சேர்த்தால், எந்த வரி வரம்பில் இருக்கிறாரோ, அதற்கான வரியைச்செலுத்த வேண்டும். உதாரணமாக, விஜய் ஆனந்த என்பவருக்கு, நிதியாண்டு 2019-20ல், சம்பளம் மற்றும் வாடகை வருமானமாக ரூ. 6 லட்சமும், அன்பளிப்பு வாயிலாக, ரூ. 3 லட்சமும் பெற்றுள்ளார் என்றால், அவரது மொத்த வரிவிதிப்புக்கு உட்பட்ட வருமானமான, 9 லட்சத்துக்கு, 20 சதவீதம் வரி செலுத்த வேண்டும்.

**என்.ஆர்.ஐ., அன்பளிப்புகள்:** வருமான வரி விதிகளை தவிர, குடியேறிய இந்தியர்கள் (என்.ஆர்.ஐ) அல்லது இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள் (ஓ.சி.ஐ.) சம்பந்தப்பட்ட ஏதேனும் எல்லைத்தாண்டிய பரிசுகள் இருந்தால், அந்நிய செலாவணி மேலாண்மைச்சட்டம் (FEMA) ஆய்வு செய்யப்பட வேண்டும். கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டிய ஒரு குறிப்பிட்ட அம்சம், வருமான வரிச்சட்டத்தின் கீழ், 'உறவினர்' வரையறுக்கப்பட்ட விதத்தில் உள்ள வேறுபாடு, வருமான வரி சட்டம் உறவினர்களிடையே பரிசுகள் விலக்குகிறது. (மேலே குறிப்பிட்டுள்ளபடி) FEMA-வின் கீழ் உறவினர் என்ற வார்த்தையின் பொருள் மிகவும் குறுகலானது. மனைவி, தந்தை, தாய், மகன், மகனின் மனைவி, மகள், மகளின் கணவர், சகோதரர் மற்றும் தனிப்பட்ட சகோதரி உட்பட 'ஃபெமா' சட்டத்தின் படி, வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களிடம் இருந்து நெருங்கிய உறவினர்களைத் தவிர, வெகுமதி வாங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. பல சமயங்களில், வரி விதிப்புகள் குறித்த நமது அறியாமை, அரசாங்கத்தின் பார்வையில் வரி ஏய்ப்பாக கருதப்படலாம். அபராதம் வரை செல்லலாம். எனவே, எதிலும் கவனம் கொள்வோம்.

– தினமலர்

# வாங்குபவர், விற்பவரை இணைக்கும் இணையதளம்

– தினமலர்

வியாபாரிகளுக்கு உற்பத்தி செய்யும் பொருட்களை எப்படி விற்பது என்ற கவலை, அதற்காக உலகளவில் விற்க, ஒரு இணையதளம் உதவுகிறது. டிரேடோலாஜி என்ற இணையதளம் வாங்குபவரையும், விற்பவரையும் இணைக்கும் இணையதளம். தற்போது அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சிமெண்ட், பிளைவுட், டி.எம்.டி., பார், உணவு எண்ணெய் ஆகிய பொருட்களை மட்டும் வாங்குபவரையும், விற்பவரையும் இணைக்கிறது.

இந்த இணையதளத்தில், 1.25 லட்சம் விவசாய விளைபொருட்கள் வாங்குபவர்களும், 40 ஆயிரத்து, 650 கட்டுமான பொருட்கள் வாங்குபவர்களும் பதிவு செய்துள்ளனர். விற்பனையாளர்கள், 16 ஆயிரத்து, 890 பேரும் பதிவு செய்துள்ளனர்.

**எப்படி நடக்கிறது?** வாங்குவோர், தங்களுக்கு பிடித்தமான விற்பவர்களை தேர்ந்தெடுத்து, பொருட்களின் தேவைகளை கொடுக்கின்றனர். தரம், டெலிவரி டேர்ம்ஸ், இன்ஸ்பெக்ஷன், பொருட்களுக்கான பணம் எப்படி கொடுக்கப்படும் என்பது பற்றிய விபரங்கள் இருக்கும். இவற்றை ஒப்புக்கொண்ட விற்பனையாளர்கள், தங்களுடைய பொருட்களுக்கான விலை விபரங்களை வாங்குபவர்களுக்கு தெரிவிக்கின்றனர். விற்பவர்கள் பங்கு கொள்வதால், இது **ரிவர்ஸ் பெட்டிங்** முறையில் நடக்கிறது எல்லோரிடமிருந்தும் கொட்டேஷன் வந்த பின், வாங்குபவர், தங்களுக்கு பிடித்தமான விற்பனையாளரிடம் விலையைக்குறைக்க வேண்டும் என விரும்பினால், கவுண்டர் ஆஃபர் கொடுக்குமாறு கூறுவர். ஆர்டர் செய்தபின், பொருட்களை வாங்குபவர், அதற்கான பணத்தை 'எஸ்க்ரோ அக்கவுன்டில்' செலுத்துவார் அல்லது 'எல்.சி.,' (லெட்டர் ஆப் கிரடிட்) ஓபன் செய்வார். இந்த வியாபாரத்துக்காக, ஒரு கமிஷனை இந்த இணையதளம் பெற்றுக்கொள்கிறது. விபரங்களுக்கு **www.tradologie.com**

இ- கிராப்ட் இந்தியா இது. இந்திய கலைப்பொருட்களை ஆன்லைனில் விற்க ஏற்படுத்தப்பட்ட ஒரு 'ஸ்டார்ட் அப்' நிறுவனம் பழங்கால பொருள், கைவினை பொருள் (மார்பிள், மெட்டல், ஹேண்ட்மேட், பேப்பர், சாண்ட் ஸ்டோன்), ஓவியங்கள், மரவேலைப்பாடு பொருட்கள், துணி வகைகள் என, பலதரப்பட்ட பொருட்களும் கிடைக்கின்றன. இந்திய நாட்டு கலைப்பொருட்களை ஒரு இடத்தில் வாங்குவதற்கு ஏற்ற ஒரு இணையதளம் இதுவாகும். உள்நாட்டு விற்பனை மட்டுமல்ல, வெளிநாட்டு விற்பனையும் செய்கிறார்கள். **www.ecraftindia.com**






காய்ச்சல், இருமல், சளி, வறண்ட தொண்டை இருநாட்களுக்கு மேல் இருந்தால் கண்டிப்பாக மருத்துவரை அணுகவும்.



https://youtu.be/-JMVniVMLr0

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் - 2019 அமலுக்கு வந்தது




நுகர்வோர் பாதுகாப்பு சட்டம்-2019 , 20.07.2020 முதல் அமலுக்கு வந்துள்ளது. காணொளிக் காட்சி மூலம் செய்தியாளர்களிடம் உரையாற்றிய மத்திய நுகர்வோர் நலம், உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பாஸ்வான், இந்தப் புதிய சட்டம் நுகர்வோருக்கு அதிகாரம் அளிப்பதுடன், நுகர்வோர் பாதுகாப்புக் கவுன்சில்கள், நுகர்வோர் பிரச்சினைத் தீர்வு ஆணையம், மத்தியஸ்தம், கலப்படம் மற்றும் போலிப்பொருள்கள் விற்பனை அல்லது உற்பத்திக்குத் தண்டனை போன்றவற்றின் மூலம், அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் என்றார்.

நுகர்வோரின் உரிமைகளை அமல்படுத்துதல், பாதுகாத்தல், ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தை (சிசிபிஏ) உருவாக்க சட்டம் வகை செய்கிறது என்று அவர் கூறினார், நுகர்வோர் உரிமைகள் மீறல்களை விசாரித்தல், புகார்கள், வழக்குகளைப் பதிவுசெய்தல், பாதுகாப்பற்ற பொருள்கள் மற்றும் சேவைகளைத் திரும்பப் பெறுதல், நியாயமற்ற வணிகநடைமுறைகள், திசைதிருப்பும் விளம்பரங்களை ரத்து செய்தல், தவறான விளம்பரங்களைத் தயாரிப்போர், அனுமதி அளிப்போர், வெளியிடுவோருக்கு அபராதம் விதித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள சிசிபிஏ-வுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

இ-வணிகத்தளங்கள் விதிக்கும் நியாயமற்ற வணிக நடைமுறைகளுக்கான விதிமுறைகளும் இந்தச் சட்டத்தின் நடைமுறைகளுக்கான விதிமுறைகளும் இந்தச்சட்டத்தின் கீழ்வரும் என்று திரு. பாஸ்வான் கூறினார்.

மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அமைத்தல், இ-வணிகத்தில் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைத் தடுப்பதற்கான விதிமுறைகள் குறித்த அரசிதழ் அறிவிக்கை வெளியிடுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநில, மாவட்ட ஆணையங்கள் தங்கள் உத்தரவுகளை மறு ஆய்வு செய்தல், நுகர்வோர் தங்கள் புகார்களை மின்னணு அடிப்படையில் தாக்கல் செய்யவும், நுகர்வோர் ஆணையங்களில் தங்கள் இருப்பிடம் அமைந்துள்ள பகுதிக்கு உட்பட்டு புகார்களைத் தாக்கல் செய்யவும் வகை செய்யும் நுகர்வோர் தாவா நீதி நடைமுறைகளை எளிதாக்க புதிய சட்டத்தில் இடமுள்ளதாக திரு. பாஸ்வான் தெரிவித்தார். மேலும், விசாரணையை காணொளிக் காட்சி மூலம் நடத்தவும், புகார்களை விசாரணைக்கு ஏற்பதற்கான குறிப்பிட்ட 21 நாட்களுக்குள் முடிவு எடுக்கப்படாவிட்டால், அவற்றை ஏற்க அனுமதிப்பது போன்றவற்றுக்கும் புதிய சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் தாவா தீர்வு ஆணையத்தின் விதிமுறைப்படி, ரூ. 5 லட்சம் வரையிலான வழக்கு தாக்கல் செய்ய கட்டணம் ஏதுமில்லை என்று அவர் தெரிவித்தார். மின்னணு அடிப்படையில் புகார்களைத் தாக்கல் செய்ய வசதி உள்ளது. அடையாளம் தெரியாத நுகர்வோர் விஷயத்தில் நுகர்வோர் நலநிதியில் கடன்பெற முடியும்.

காலியிடங்கள், தீர்க்கப்பட்ட வழக்குகள், நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் பிற விஷயங்கள் பற்றி மாநில ஆணையங்கள் மத்திய அரசுக்கு காலாண்டுக்கு ஒருமுறை தகவல் அளிக்கும். பொதுவான விதிகள் தவிர, புதிய சட்டத்தின் கீழ், மத்திய நுகர்வோர் பாதுகாப்புக் கவுன்சில் விதிகள், நுகர்வோர் தாவா தீர்வு ஆணைய விதிகள், மாநில / மாவட்ட ஆணைய உறுப்பினர்கள், தலைவரை நியமிப்பதற்கான விதிகள், மத்தியஸ்த விதிகள், மாதிரி விதிகள், இ-வணிக விதிகள், நுகர்வோர் ஆணைய நடைமுறை ஒழுங்குமுறை, மத்தியஸ்த ஒழுங்குமுறை ஆகியவையும் உள்ளன. மாநில ஆணையம் மற்றும் மாவட்ட ஆணைய நிர்வாகக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையும் இதில் அடங்கும்.

திரு. பாஸ்வான் தமது நிறைவுக்கருத்தாக, முந்தைய நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986-ல் நீதி வழங்க ஒற்றை அம்ச அணுகுமுறை கடைப்படிக்கப்பிட்டதாகவும், அதனால் காலவிரயம் ஆனதாகவும் தெரிவித்தார். பாரம்பரிய விற்பனையாளர்களிடமிருந்து மட்டுமல்லாமல், புதிய இ-வணிக சில்லரை விற்பனையாளர்கள் / தளங்களில் இருந்தும் வாங்குபவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க பல திருத்தங்கள் செய்த பின்னர் இந்தப் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாக அவர் கூறினார். நாட்டில் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க உபகரணமாக இந்தச் சட்டம் இருக்கும் என்று அவர் கூறினார்.


**Sowndarya Traders**

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# புதிய படிவம் 26AS யாருடைய உதவியுமின்றி வரிசெலுத்துவோர் தாங்களே பூர்த்தி செய்யக்கூடியது

வரி செலுத்துவோர், தங்களது வருமானவரிக் கணக்கை, யாருடைய உதவியுமின்றி, மின்னணு முறையில் விரைவாகவும், சரியாகவும் தாக்கல் செய்ய புதிய படிவம் 26ஏ.எஸ். வழிவகை செய்துள்ளது.

நடப்பு மதிப்பீட்டு ஆண்டிலிருந்து, வரி செலுத்துவோர் தங்களது பணப் பரிவர்த்தனைகள் தொடர்பாக நிதிப் பரிவர்த்தனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு வகையான கூடுதல் விவரங்களை, மேம்படுத்தப்பட்ட 26ஏ.எஸ் படிவத்தில் காணலாம். குறிப்பிட்ட இந்த பணப் பரிவர்த்தனை அறிக்கையை தாக்கல் செய்வோரிடமிருந்து, வருமானவரித்துறைக்கு கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில், அந்த விவரங்கள் தற்போது, படிவம் 26ஏ.எஸ்-ன் இ-பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வரி பொறுப்புணர்வு மற்றும் மின்னணு முறையில் தாங்களாகவே கணக்கு தாக்கல் செய்வதை எளிதாக்குவதன் மூலம், வரி செலுத்துவோர், அவரது வருமான வரிக் கணக்கு விவரங்களை நல்ல சூழலில் சரியாகக் கணக்கிட முடியும். அத்துடன், வரி நிர்வாகத்தில், மேலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வையும் இது ஏற்படுத்தும்.

சம்பளம் வழங்குவோரால் பிடித்தம் செய்யப்படும் வரி மற்றும் வருமான வரித்துறையிடம் செலுத்தப்பட்ட வரி விவரங்களை, நிரந்தரக் கணக்கு எண் PAN அடிப்படையில் தெரிவிப்பதுடன், செலுத்தப்பட்ட பிற வரி விவரங்கள், திரும்பப் பெற்ற வரித்தொகை மற்றும் வரிப்பிடித்தம் செய்த இடத்தில் நடைபெற்ற குறைகளைத் தெரிவிக்க பழைய 26ஏ.எஸ். படிவும், பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், தற்போது, வரிசெலுத்துவோருக்கு உதவி செய்யக்கூடிய பணப்பரிவர்த்தனை அறிக்கை, வரி செலுத்துவோரின் அதிக அளவிலான பணப்பரிவர்த்தனைகளை நினைவுகூர்ந்து, கணக்கு தாக்கல் செய்யும்போது தேவைப்படும் விவரங்களை அளிக்க உதவும்.

சேமிப்புக் கணக்குகளில் ரொக்கமாக செலுத்திய / திரும்பப் பெற்ற தொகை, அசையா சொத்துக்கள் விற்பனை / கொள்முதல், காலக்கெடுவுடன் கூடிய முதலீடுகள், கிரெடிட் கார்டுக்கு செலுத்திய பணம், வாங்கப்பட்ட பங்கு விவரங்கள், அந்நியச் செலாவணி, பரஸ்பர நிதியம், பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு ரொக்கமாக செலுத்திய தொகை உள்ளிட்ட விவரங்கள், வங்கிகள், பரஸ்பர நிதி, கடன்பத்திரங்களை வெளியிடும் நிறுவனங்கள் மற்றும் பதிவாளர் அல்லது சார்-பதிவாளர் போன்ற குறிப்பிட்ட நபர்களிடம் இருந்து பெறுவதற்கு வருமான வரித்துறையால் பயன்படுத்தப்படும் வருமனவரிசட்டம் - 1961, பிரிவு 258பி.ஏ.-யின்படி, 2016 முதல், தனிநபர்கள் மேற்கொண்ட உயர்மதிப்பு பணப் பரிவர்த்தனைகளை அறிந்து கொள்ளலாம்.

பணப் பரிவர்த்தனை அறிக்கையின்படி, தற்போது அது போன்ற தகவல்களை அனைத்தும், புதிய படிவம் 26ஏ.எஸ்-ல் தெரிவிக்கப்பட வேண்டும். புதிய 26ஏ-எஸ் படிவத்தைப் பயன்படுத்தும் எந்தவொரு வரி செலுத்துவோரும், பரிவர்த்தனை வகைகளை, பணப்பரிவர்த்தனை அறிக்கையைத் தாக்கல் செய்பவரின் பெயர், பரிவர்த்தனை தேதி, தனிநபர் / கூட்டுப் பரிவர்த்தனை, பங்குதாரர்களின் எண்ணிக்கை, தொகை, பணம் செலுத்தும் விதம் மற்றும் பிற குறிப்புகளை, படிவத்தின் இ-பிரிவில் தெரிவிக்க வேண்டும்.

அதற்கும் மேலாக, நேர்மையாக வரி செலுத்துவோர் தங்களது வருமானவரிக் கணக்கைத் தாக்கல் செய்யும்போது, மேம்பட்ட பணப்பரிவர்த்தனைகளைத் தெரிவிக்க இது உதவுவதோடு, பணப்பரிவர்த்தனைகளை மறைக்க முயற்சிப்பதை இது தடுத்து நிறுத்தும். அத்துடன், 2015-16ம் நிதியாண்டு வரையிலான வருடாந்திர தகவல் கணக்கில் பெறப்பட்ட தகவல்களும், புதிய 26ஏ.எஸ் படிவத்தில் இடம்பெறும்.

**3. DIFFERENCE BETWEEN OLD AND NEW FORM 26AS**

| S.NO. | BASIS OF DIIFERENCE | OLD 26AS | NEW 26AS |
|---|---|---|---|
| 1. | Name | Annual Statement of tax deducted or collected or paid | Annual Information Statement |
| 2. | Date of providing Form 26AS | Director General of Income tax (Systems) were required to provide Form 26AS by 31 July following the financial year during which taxes were deducted or collected or paid. | Required to upload in registered account of tax payer within 3 months from the end of the month in which information is received. |
| 3. | More Communication details looking to advancement in Technology | Name<br>Address<br>PAN | Additional details–<br>Date of Birth<br>Registered Email ID<br>Contact No<br>Aadhar Number |
| 4. | Demand Outstanding | Details not provided in Old 26AS | Will provide details of demand outstanding so that tax payer can timely verify whether demand shown in his registered income tax account is correct or not. |
| 5. | Pending Proceedings | Details not provided in Old 26AS | Details of pending proceedings and competed assessments will be reflected in Form 26AS to keep taxpayer aware. |
| 6. | Completed Proceedings | | |
| 7. | Details of Specified Financial Transaction | AIR transactions were reflected in Form 26AS. | Banks, mutual fund, institutions issuing bonds, Registrars and Sub Registrars are required to report high value transactions to income-tax authority. The same transactions will be reflected in 26AS for transparency. It will help tax payer in determining correct tax liability. |

வெளியே செல்லும்போது மற்றவர்களிடம் இருந்து குறைந்தது 3 முதல் 6 தூரம் வரை தள்ளி இருப்பது நல்லது.

# மின்னணுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு உகந்த சூழலை உருவாக்க அரசு உதவும்

தொலைக்காட்சி பெட்டிகள், சிசிடிவிக்கள், குளிர்சாதனப் பெட்டிகள் போன்றவற்றைப் பெருமளவில், இந்தியாவிலேயே தயாரித்து, ஏற்றுமதி செய்யக்கூடிய மின்னணு சாதனங்களை தமது அமைச்சகம் அடையாளங்கண்டு வருகிறது என்று மத்திய வர்த்தக, தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

(இ எஸ் சி) மின்னணு மற்றும் கணிப்பொறி மென்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு - (Electronics & Computer Software Export Promotion Council) உறுப்பினர்களுடன் காணொளி மாநாடு மூலமாக கலந்துறையாடிய அமைச்சர், இது போன்ற பொருள்கள் பற்றி குறிப்பான ஆலோசனைகள் வழங்குமாறும், இவற்றைப் போட்டியிடக் கூடிய திறன் கொண்டதாக மாற்றுவதற்குத் தேவையான கொள்கை அளவிலான மாற்றங்கள் குறித்த ஆலோசனைகளைத் தயாரிப்பதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும் உகந்த சூழலை உருவாக்குவதற்கு அரசு உதவும் என்று அவர் கூறினார்.

மின்னணு உதிரிபாகங்கள் ஹார்டுவேர் துறை, புதுமை, ஆராய்ச்சி / வளர்ச்சி, உள்நாட்டு முன்னோடி வழிவகைகளை விரிவுபடுத்துதல், ஏற்றுமதியை அதிகரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார். சுயசார்பு கொண்டவையாகவும், அரசின் உதவி இல்லாமல் வளர்ச்சி அடைந்த தொழில் நிறுவனங்களும், தங்கள் முத்திரையைப் பதித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தகவல் தொடர்பு, தகவல் தொடர்பு சார்ந்த சேவைப்பிரிவுகள், வர்த்தக வழிமுறை செயல்பாட்டு பிபிஓ பிரிவுகள் ஆகியவை தீர்வுகள் வழங்குபவர்களாகவும், ஏற்றுமதியாளர்களாகவும் முன்மாதிரியாகத் திகழ்கின்றன என்று அவர் குறிப்பிட்டார். இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கான திட்டம் எம்.ஐ.இ.எஸ் (Exports from India Scheme - MEIS) போன்ற திட்டங்கள் கால வரையறைக்கு உட்பட்டவை என்பதனாலும், ஏற்றுமதிக்குப் போட்டியிடத் தகுந்த பொருள்கள் என்பவை அந்தப் பொருள்களின் தொழில்துறையின் வலிமையாலும் பெறப்பட வேண்டியவை என்பதாலும், ஊக்குத் தொகையை மட்டுமே சார்ந்திருப்பது, பொருள்களை, ஏற்றுமதிப் போட்டிக்கு உகந்தவையாக மாற்றாது என்று அவர் கூறினார். குவாண்டம் தொழில்நுட்பம் அவற்றின் பயன்பாடு ஆகியவற்றுக்கான தேசியத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, தொழில் துறையும் அரசும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

என்.எம்.கியூ.டி.ஏ கணக்கிடுதல், தொடர்பு, உணர்திறன், இரசாயனம், கிரிப்டோகிராஃபி இரகசிய எழுத்துக் கலை, இமேஜிங், இயந்திரவியல் ஆகியவற்றில் ஏற்படும் மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்கான பொறியியல் தீர்வுக்கு பயன்படுத்தப்படுகிறது. மென்பொருள் மற்றும் சேவை ஏற்றுமதியின் தரம் மற்றும் துல்லியமான தரவுகளின் தேவை குறித்துப் பேசிய திரு. கோயல், இது குறித்து இந்திய ரிசர்வ் வங்கியுடன் தமது அமைச்சகம் பேசி வருவதாகவும், மின்னணு மற்றும் கணிப்பொறி மென்பொருள் துறைக்கு முழு ஆதரவு உண்டு என்றும் அமைச்சர் உறுதியளித்தார். கடந்த இரண்டு ஆண்டுகளில், நாட்டில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது என்றும் சுயசார்பு இந்தியாவை உருவாக்குவோம் என்று பிரதமர் விடுத்த அறைகூவலுக்கு ஏற்ப துறையினர் வளர வேண்டும் என்றும், அவர் கூறினார்.

சுயசார்பு இந்தியா என்ற பிரதமரின் தொலைநோக்குத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில், அரசும், தொழில்துறையும் பரஸ்பர நம்பிக்கையுடன் செயலாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்திய அமைச்சர், எண்ணற்ற அளவிலான இன்னும் அறியப்படாமல் உள்ள, ஏராளமான வர்த்தக வாய்ப்புகளைக் கண்டறிவதில் அரசும், தொழில்துறையும், இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். தொழில்துறை செயலாற்ற உதவுகின்ற வகையிலான சுற்றுச்சூழலை உருவாக்கும் பணிகளை அரசு எடுத்து வருகிறது என்றும், தொழில்துறை புதிய திறன்களை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், இந்தியப் பொருள்கள் உலகத்தரத்திற்கு ஏற்றவையாக இருக்க வேண்டும் என்றும் அதற்கேற்ற வகையில் அவை செயலாற்ற வேண்டும் என்றும், அதுவே சுயசார்பு இந்தியாவின் சாரமாகும் என்றும் அமைச்சர் கூறினார்.

மின்னணு மற்றும் கணினி மென்பொருள் துறையில் இந்திய ஏற்றுமதியைப் பெருக்குவது குறித்து இ எஸ் சி தயாரித்த கொள்கை அறிக்கை ஒன்றை அமைச்சர் வெளியிட்டார். இந்த இரண்டு பிரிவுகளிலும் இந்திய ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான பல்வேறு ஆலோசனைகள் இந்த அறிக்கையில் உள்ளன.


18 ஆம் ஆண்டு சேவை
பதிவு எண்: 16 / 2002
Ph : 0452 - 2679676, 4219676
மகாத்மா முதியோர் இல்லம்
Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்
7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.
exempt u/s 80G vide C.I.T. Madurai order in C.No.464/29/04-05/CIT-I
FCRA No. 075940608
PAN No. : AABTM1941R
A/c Name : MAHATMA'S TRUST
A/c No. : 171711500001527
IFSC CODE : KVBL0001717 MICR CODE : 625053023
KARUR VYSYA BANK, Kamarajar Salai Br. MADURAI

E-mail : mahatma.trust@yahoo.in website : www.mahatmaoldagehome.org
ஒருநாள் நீங்களும் உதவலாமே
தங்களின் பிறந்த நாள், திருமண விழா, திருமண நாள்
பெயர் சூட்டு விழா, சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேக விழா
தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும், ரம்ஜான்
உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து விசேஷ சுபகாரிய காலங்களிலும் எங்கள் முதியோர் இல்லத்திற்கு "நன்கொடையாகவோ (அ) உணவாகவோ" வழங்குமாறு வேண்டுகிறோம்.
"தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு 80-G உள்ளது."
18 ஆம் ஆண்டு சேவை
தொடர்புக்கு : மகாத்மா முதியோர் இல்லம்
செல் : 9786140570, 94437 23337

## அயோத்தியில் ராமர்



ஆகஸ்ட் 5, 2020 - ஒவ்வொரு இந்தியரும் (இந்துக்களும்) பெருமை அடையக் கூடிய நாளாகும். குறிப்பாக நம் சமூக (சௌராஷ்ட்ரா) மக்கள் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டிய நாளாகும். அன்றைய தேதியில் நமது பாரதப் பிரதமர். திரு. நரேந்திர மோடி அவர்கள் 500 ஆண்டுகளுக்கும் மேலான இந்து மக்களின் கனவான இராமர் கோயில் கட்ட அயோத்தியில் அடிக்கல் நாட்டும்பொழுது, சௌராஷ்ட்ர பிரதிநிதியாக சங்கல்பம் செய்து கொண்டது நம்மையெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. நம் இன மக்கள் ஒவ்வொருவரும் இராமர் கோயிலை தரிசனம் (2024ம் ஆண்டில்) செய்வது தங்களது முதன்மையான கடமையாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்துக்களின். கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை பேணிக் காப்பதும், அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்செல்வது நமக்கு இன்றியமையாதது. நம் சமூக ஒற்றுமை மேலோங்கட்டும்.

– S.S. ராம்சந்தர்

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** 6 மாதங்களாக முழுங்கால் வலி உள்ளது. மருத்துவரின் ஆலோசனையில் மூட்டிற்கு உறை 24 மணி நேரம் அணிந்து வருகிறேன். மூட்டினில் வலி சற்று குறைந்து உள்ளது. ஆயினும் காலில் வீக்கம் ஏற்படுகிறது. கால்வீக்கம் இல்லாமல் இருக்க நான் என்ன செய்ய வேண்டும்.

**பதில்:** மூட்டின் உறை இறுக்கமாக இருந்தால் பாதத்தில் இருந்து இருதயத்திற்கு செல்லும் இரத்தப்போக்கு பாதிக்கப்படும். அதனால் கால்வீக்கம் ஏற்படலாம். மூட்டின் உறை பெரிதாக இருந்தால் மூட்டினை பாதுகாக்கும் தன்மை குறையும். ஆதலால் நீங்கள் உங்கள் மூட்டு உறையின் அளவு சரியானது தான் என்று தெரிந்து கொள்ளவும். மேலும் நீங்கள் மூட்டு உறையை 24 மணி நேரம் அணிய அவசியம் இல்லை. இதை கடைபிடித்தால் கால் வீக்கம் நீங்கும்.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,

வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக், செல்: 93442 46436

## உலக அளவில் கல்வித்தரம்



இந்திய அரசாங்கம் உலக அரங்கில் மிக உயர்ந்த நூறு பல்கலைக்கழகங்கள் நமது நாட்டில் செயல்பட வழிவகை செய்துகொண்டிருக்கின்றது. அடுத்த 30 ஆண்டுகளில், இந்தியா ஒரு ஹார்வேர்டு ஹைதராபாத், பிரின்ஸ்டர் மும்பை, ஆக்ஸ்போர்டு கொல்கத்தா வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

கல்வி துறையில் குறிப்பாக தொழிற்கல்வியில் நமது மாநிலம் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. மத்திய அரசின் இந்த அறிவிப்பால், நமது மாநிலமும் இது போன்ற உலக அரங்கில் கொடி கட்டிப்பறக்கும் பல்கலைகழகங்கள் தங்கள் சேவையை தொடங்கிட வழி வகையினை செய்ய வேண்டும்.

இதற்கு நமது சமூக கல்வி ஸ்தாபனங்கள் மாநில அரசாங்கத்திடம் இந்த கோரிக்கைகளை வைத்து நமது மாநிலம் உலக அரங்கில் பதிய வைக்க வழி வகைகளை செய்து அதற்குண்டான முயற்சியினை எடுத்து நம் சமூக மக்கள் மிகச் சிறந்த கல்வி முறையினை கற்றுக்கொள்ள முயற்சி எடுக்க வேண்டும்.

நிச்சயம் அனுபவசாலிகள் நிறைய பேர் நம் சமூக ஸ்தாபனங்களில் இருப்பதால், தொடர்ந்து முயற்சித்தால் நம்மால் உலக தரமுள்ள கல்வியினை நமது சந்ததியினர்க்கு அளிக்க முடியும் என்று பெரிய நம்பிக்கையுடன் இந்த கருத்தை பதிவு செய்கிறோம்.

– S.S. ராம்சந்தர்





சிறந்த தையல் !
குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

ரேவதீஸ் டெக்ஸ்

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223



சுதந்திர போராட்டத்திற்கு

# திரு. N.M.R. சுப்பராமன்

அவர்களின் பங்கு






தேச விடுதலை போராட்ட காலத்தில், இருவகை இயல்பினர் இருந்தனர். அவர்களில் ஒரு சாரார், வாய்ப்புக் கிடைக்குமானால் பலாத்கார வழிமுறை மூலம் போராடவும் தயாராக உள்ளவர்கள். தங்களை தாங்கள் தீவிரவாதிகளாகப் பாவித்துக் கொண்டனர். மற்றொரு வகையினர், நிர்மாணத் திட்டங்களில் மாத்திரமே ஈடுபாடு கொண்டவர்கள். சுதந்திரம் கிடைப்பது தாமதமானாலும் தமது வழிமுறை அகிம்சையாக இருக்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை. இவ்விரு தரப்பினரும் காந்தியடிகளைத் தலைவராக ஏற்றுக்கொண்டனர். காரணம் காந்திஜி புரட்சிகரமான மனப்போக்குடைவயர். வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் போராடத் தயங்கியதில்லை. அதே சமயம், சத்தியம், அகிம்சை என்ற கோட்பாட்டில் ஒருபோதும் அவர் தளர்ந்ததில்லை. அரசியல் துறை, நிர்மாணத்துறை இரண்டுமே அவருக்கு முக்கியம். இவ்விரண்டுக்கும் இடையில் அவர் வேறுபாடு காணவில்லை. ஆன்மீகக் கண்கொண்டு பார்க்குமிடத்து இவ்விரண்டும் சேவைக்குரிய கருவிகளே. ஆகவே அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற அத்வைத பாவனையுடையவர் காந்தியடிகள்.

காந்தியடிகளின் அடிச்சுவட்டில் இந்த மூன்றாம் வகையைச் சார்ந்தவர் **சுப்பராமன்** அவர்கள். ஆகவே, மதுரைப் பிராந்தியத்தில் நடைபெற்ற அரசியல் மற்றும் நிர்மாணத் திட்டங்கள் அனைத்துக்கும் அவர் தலைமைத்தாங்கினார். இரு சாராரும் அவரிடம் நம்பிக்கை வைத்தனர். அவரது தீவிர செயல் திறனையும் சத்திய பாவனையையும் மதித்து அவரை காங்கிரஸ் குழுவினர் மதுரை மாவட்ட காங்கிரஸ் தலைவராக 1930ல் தேர்வு செய்தனர். அப்போது அவரது வயது 25. காங்கிரஸ் வட்டாரத்தில் **மதுரையின் கோகலே** என்று பாராட்டி அழைத்தனர். ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே காந்தியடிகளுக்கு அரசியல் குரு என்பது பிரசித்தம்.

1930ல் உப்புச்சத்தியாகிரகத்திற்கு பிறகு, அடுத்தடுத்து பல அறப்போராட்டங்கள் நடைபெறலாயின, அவற்றில் குறிப்பிடத்தக்கவை மதுக்கடை மறியல் போராட்டமும், அந்நிய நாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் சுதேசி இயக்கமும் ஆகும். ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் தமிழகமெங்கிலுமிருந்து கலந்து கொண்டனர். இம்மாநாட்டிற்குத் தலைமைத் தாங்கும் பேறு சுப்பராமன் அவர்களுக்குக் கிடைத்தது. அதில் அவர் ஆற்றிய தலைமை உரை அனைவருக்கும் ஊக்கத்தை அளித்தது. பத்திரிக்கைகள் அதுகுறித்து தலையங்கங்கள் எழுதின. குறிப்பாக அக்காலத்தில் பிரபலமாக விளங்கிய தேசிய வார இதழான ‘சுதந்திர சங்கு’-வில் வெளியானது. தமிழ்நாட்டில் இந்தப்போராட்டம் காங்கிரசுக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தந்தன.

சுப்பராமன் அவர்கள் நூற்றுக்கணக்கான தொண்டர்களைத் திரட்டி, பயிற்சி வகுப்புகள் நடத்தி மறியல் போராட்டத்திற்கு அனுப்பிக்கொண்டே இருந்தார். இதற்கு டி.கே. ராமா அவர்கள் பேருதவியாக இருந்தார். சுப்பராமன் அவர்கள் தலைமையில் மதுக்கடை மறியல் போராட்டத்தில் சுப்பராமனையும் பல தொண்டர்களையும் கைது செய்து மதுரை மத்திய சிறையில் வைத்தனர். அங்கிருந்து கோவை சிறைக்கும், கடலூர் சிறைக்கும் மாற்றப்பட்டார். அங்கு பல தலைவர்களையும் தொண்டர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இரண்டரை ஆண்டு சிறை வாசத்துக்குப்பின்னர் 1932ம் ஆண்டு இறுதியில் அவர் விடுவிக்கப்பட்டார். விட்டுச்சென்ற நிர்மானப் பணிகளையும் காங்கிரஸ் பணிகளையும் முன்னைவிட அதிக உற்சாகத்துடன் செயலாற்றத் தொடங்கினார்.

சுப்பராமன் அவர்கள் தீண்டாமை விலக்குப் பணியில் அதிக நாட்டமுள்ளவராக இருந்தார். இதன் காரணமாக 1935ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் அவர் மதுரை நகராட்சியின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறையினைக் கண்டித்து நகராட்சிக் குழுவில் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தார். ஆங்கிலேய அரசுக்கு எதிராக பல்வேறு செயல்களை புரிந்தார். ஆளுநருக்கும் நகராட்சித் தலைவர் என்ற முறையில் சுப்பராமன் அவர்களுக்கும் பிணக்கு வலுத்தது.

மறுபுறம், இரண்டாம் உலகப்போர் யுத்தத்திற்கு ஆள் திரட்டும் பணிக்காக மதுரைக்கு ராணுவ இலாகா அமைக்க இடம் ஒதுக்கித்தர நகராட்சியைக்கோரியது. இதற்கு இடம் தர முடியாது என்று அக்கோரிக்கையை நிராகரித்து, மதுரை எல்லைக்குள் ராணுவ அதிகாரிகள் உள் நுழைய தடை உத்தரவு பிறப்பித்தார். இது போன்ற துணிவான உத்தரவுகள் இந்தியாவில் வேறு எங்கும் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று கூறப்படுகிறது. ஆளுநரையும், ராணுவ அதிகாரிகளையும் எதிர்த்துப் போராடும் துணிவும் அதனால் விளையும் ஆபத்தையும் எதிர்நோக்கும் மனவலிமையும் ஆன்ம பலமும் அவருக்கு இருந்தது கண்டு மக்கள் வியந்தனர்.

1942ம் ஆண்டு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் உச்சகட்டம். நாட்டில், இந்து முஸ்லீம் பிணக்கு உருவான சமயம். இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலுப்படுத்தும் பணிகளில் தீவிரம் காட்டினார். அதே ஆண்டு வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை ஆதரித்தும், தலைவர்களைச் சிறைப்படுத்தியமைக்காக ஆங்கில அரசை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானம் இயற்றினார். அப்போது மீண்டும் கைது செய்யப்பட்டார். அவருக்காக நகர் முழுவதும் கடையடைப்பு நடைபெற்றது. 1944ம் ஆண்டு நிபந்தனை இன்றி விடுதலை செய்தது. இந்து முஸ்லீம் கலவரங்கள் பலாத்கார வடிவெடுத்துக் கொண்டிருந்தது. அந்த சமயம் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். அதனையும் பொருட்படுத்தாது, இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக தெருத்தெருவாக செல்லத் தொடங்கினார்.

இறுதிவரை ஓயாது நாட்டிற்காக காந்தியின் கோட்பாட்டில் நடந்தவர். அதற்காகவே இன்றுவரையில், அவரை **‘மதுரை காந்தி’ N.M.R. சுப்பராமன்** என்றே மதுரை மக்களால் அழைக்கப்படுகிறார். வில்லாபுரத்தில் உள்ள மேம்பாலம் இவரின் பெயரில் உள்ளத. தற்போது, மத்திய அரசு அவருக்கு தபால் தலையும் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- மதுரை காந்தி, (ஒரு சத்தியாகிரகியின் கதை நூலிலிருந்து) -தொகுப்பு: இதழ் குழு



# சாலைகளுக்கும் வருகிறது தரவரிசை

## தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை

சாலைகளின் தரத்தை மேம்படுத்தும் முயற்சியில் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நாட்டின் நெடுஞ்சாலைகளின் செயல்திறன் மதிப்பீடு மற்றும் தரவரிசைகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலைகளின் மதிப்பீட்டு தணிக்கை மற்றும் தரவரிசை, தேவைப்படும் இடங்களில், தரத்தை மேம்படுத்துவதற்கும், நெடுஞ்சாலைப் பயணிகளுக்கு உயர் மட்ட சேவையை வழங்குவதற்கும் தேவையான உதவிகளைச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மதிப்பீட்டு அளவுகள் வெவ்வேறு சர்வதேச நடைமுறைகளாக இருப்பினும், இந்திய சூழலில் நெடுஞ்சாலை செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டவை.

மதிப்பீட்டிற்கான அளவுகோல்கள் மூன்று முக்கிய தலைப்புகளில் பரவலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை, **1. நெடுஞ்சாலை செயல்திறன் (45%), 2. நெடுஞ்சாலைப் பாதுகாப்பு (35%) 3. பயனர் சேவைகள் (20%)** மதிப்பீட்டின் முடிவின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒரு விரிவான பகுப்பாய்வு மேற்கொண்டு, ஒட்டுமொத்த சேவை தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டிய அளவை தீர்மானிப்பார்கள்.

மேற்குறிப்பிட்ட மூன்று வகைகளின் அடிப்படையில், ஒவ்வொரு அளவுகளிலும் ஒவ்வொரு வழித்தடத்திலும் பெறப்பட்ட மதிப்பெண்களையும், கருத்துக்களையும் அளவீடாக வைத்து, தற்போதுள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்கான உயர் தர செயல்பாடுகள், சிறந்த பாதுகாப்பு மற்றும் பயனர் அனுபவர் ஆகியவைகளை வழங்க முடியும்.

மேலும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் அடுத்தடுத்த திட்டங்களுக்கான வடிவமைப்பு, தரநிலைகள், நடைமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் ஒப்பந்தங்களின் இடைவெளிகளைக் கண்டறிந்து நிரப்பவும் இது உதவும்.



# புதிய கிரெடிட் கார்டு IRCTC அறிமுகம்

ஐ.ஆர்.சி.டி.சி. மற்றும் எஸ்.பி.ஐ. கார்டு ஆகியவை இணைந்து புதிய ரூபே கிரெடிட் கார்டை அறிமுகம் செய்துள்ளன.

இந்த ஐ.ஆர்.சி.டி.சி., எஸ்.பி.ஐ., ரூபே கார்டை, மத்திய ரயில்வே அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அவர்கள் கடந்த மாதம் அறிமுகம் செய்து வைத்தார். ஐ.ஆர்.சி.டி.சி., 5 கோடிக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை கொண்டுள்ளது. தினசரி 8.5 லட்சத்துக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய கிரெடிட் கார்டு மூலமாக, வாடிக்கையாளர்கள் ரயில் பயணச் சீட்டுகளை பதிவு செய்யலாம். மேலும், ஆன்லைன் மூலமாக பொருட்களை வாங்குவது உள்ளிட்டவற்றையும் மேற்கொள்ளலாம். மேலும், இந்த கார்டை, 'பாயின்ட் ஆப் சேல்' மிஷினில் தேய்க்க வேண்டிய தேவை கிடையாது. அதன் மீது காட்டினாலே போதுமானது. கொரோனா பரவல் ஏற்படுவதை இம்முறையில் தவிர்க்க விட முடியும்.

இது குறித்து, அமைச்சர் பியூஷ் கோயல் கூறியதாவது. வரும் ஆண்டுகளில், ஒவ்வொரு ரயில் பயணச்சீட்டும், இந்த புதிய கார்டு மூலமாக பதிவு செய்யப்பட வேண்டும் என்ற குறிக்கோளை கொண்டுள்ளது.

மத்திய அரசு இந்த கிரெடிட் கார்டு மூலம், பொருட்கள் வாங்குவது, பொழுதுபோக்கு, பரிவர்த்தனை கட்டணம் ஆகியவற்றில் பயணியருக்கு சலுகைகள் கிடைக்கும். இந்த கார்டு விரைவில், 3 கோடிக்கும் அதிகமான பயனாளிகளை அடைவதை தனிப்பட்ட முறையில் கண்காணித்து உறுதி செய்வேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




வாழ்வில் வளம் பெற! வர்த்தகத்தில் வெற்றி பெற!!
SCT
MADURAI NO.1 ENTERTAINMENT CHANNEL
24X7 LOCAL TV CHANNEL IN MADURAI
Get in on Google Play Store
Sourashtra Cable TV SCT
விளம்பரங்கள் செய்து பயன் பெறுவீர்
94430 34009
99424 17417
98421 91906
sctchannelmdu@gmail.com
GSTIN : 33ADWFS4457J1ZD

# பான் கார்டு தொலைந்துவிட்டதா? புதிதாக பெறுவது எப்படி?

வங்கிக்கணக்கு வருமான வரித் தாக்கல் என நிதி சார்ந்த பல முக்கிய விஷயங்களுக்கு பான் கார்டு எனும் நிரந்தர கணக்கு எண் PAN தேவைப்படுகிறது. தற்போது பான் கார்டு புதிதாக பெற வேண்டும் என்றாலோ, தொலைந்துவிட்டாலோ ஆன்லைன் மூலமாக பெறும் வழிகள் உள்ளன. அந்த வகையில், பான் கார்டு தொலைந்துவிட்டால் புதிதாக பான் கார்டு பெற என்ன செய்யலாம்.

- முதலில் விண்ணப்பிப்பதற்கு முன்னதாக பான் எண்ணுடன் தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி இணைந்திருக்க வேண்டியது அவசியம்.
- வருமான வரித்துறையின அதிகாரப்பூர்வ இணையதளமான https://www.tin-nsdl.com என்ற இணையதள முகவரியில் சென்று பான் கார்டு நகல் எடுக்க (reprint of your PAN) என்பதை கிளிக் செய்யவும்.
- இப்போது திறக்கும் தனி திரையில் உங்களது பான் எண், ஆதார் எண், பிறந்த தேதி ஆகிய விவரங்களை உள்ளிட வேண்டும்.
- அடுத்த Captcha கோடு அளித்து Submit என்பதை கிளிக் செய்யவும். மேலும் பான் கார்டு நகலுக்கு ரூ. 50 செலுத்த வேண்டும்.
- ஒருவேளை, பான் கார்டு வெளிநாட்டு முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்றால் ரூ. 959 செலுத்த வேண்டும்.
- தொடர்ந்து, பான் கார்டு விண்ணப்பிக்கும்போது அளித்த மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை அளிக்க வேண்டும். இரண்டில் ஏதேனும் ஒன்றை உள்ளிட்டாலே போதுமானது. இப்போது, மொபைல் எண்ணுக்கும், மின்னஞ்சலுக்கும் வரும் ஒடிபி எண்ணை உள்ளிட வேண்டும். (மொபைல் எண், மின்னஞ்சல் முகவரியை மாற்ற வேண்டும் என்றால் அதற்கென தனி வழிமுறைகள் உள்ளன).
- அடுத்ததாக விண்ணப்பக் கட்டணத்தை செலுத்த, உங்கள் பான் கார்டு நகல் பதிவிறக்கம் ஆகிவிடும். அதை நீங்கள் பிடிஎஃப் வடிவில் எடுத்துக்கொள்ளலாம். மேலும், உங்களது முகவரிக்கும் அனுப்பி வைக்கப்படும்.
- அதே நேரத்தில் உங்கள் மொபைல் எண்ணுக்கும், மின்னஞ்சலுக்கும் பான் கார்டு நகல் எடுப்பதற்கான லிங்க்-ம் அனுப்பப்படும். எதிர்காலத்தில் இந்த லிங்க்-ஐ பயன்படுத்தி, பான் கார்டு நகலை பதிவிறக்கம் செய்யலாம்.

– தினமலர்

# எழுந்து வா! நிமிர்ந்து வா! சகோதரா!...

கொரோனா நமது வாழ்க்கையையும், தொழிலையும் புரட்டி போட்டது மட்டுமல்லாமல், நமது வாழ்க்கை முறையிலும் தொழில் செய்முறையினையும் மாற்றி அமைத்துவிட்டது. புதிய எண்ணங்கள், புதிய சூழ்நிலைகள், புதிய எதிர்பார்ப்புகள், புதிய வாய்ப்புகள் இந்த எண்ணங்களோடு நாம் நமது வாழ்க்கையையும், தொழிலையும் அணுகினால் நிச்சயமாக உறுதியாக ஜெயிக்க முடியும்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பதற்கேற்ப தபால் கார்டும், தந்தியும், டெலிபோன் பூத்தும் காணாமல் போனது போல், இன்றைய சூழ்நிலையிக்கேற்ப நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். சத்தான உணவு, போதிய ஓய்வு, உடற்பயிற்சி இவையெல்லாம் தற்பொழுது நமது ஆரோக்கியத்திற்கு முக்கியமானவை. சிறந்ததை தேர்ந்தெடுப்போம்.

நாம் வளர்ந்தால் நமது குடும்பம் வளரும். குடும்பம் வளர்ந்தால் சமுதாயம் வளரும். சமுதாயம் வளர்ந்தால் நம் நாடு வளரும் நாடு வளர்ந்தால் இந்த உலகம் வளரும். ஜெயிக்க பிறந்தவர்கள் நீங்கள் இத்தனை சவால்களை எதிர்கொண்டு தற்பொழுது நீங்கள் ஆரோக்கியமாக இருக்கின்றீர்கள் என்றால் நீங்கள் வெற்றியின் பக்கம் இருக்கின்றீர்கள் என்று அர்த்தம்.

'உடல் ஆரோக்கியம்... பெரிய பொக்கிஷம்..' உயர்ந்த வாழ்க்கை வாழவும், உன்னதமான சமுதாயத்தை உருவாக்கவும் பெரும் சாதனையாளர்களாக உருவாகவும். எழுந்து வா! சகோதரா! நிமிர்ந்து வா! சகோதரா! வெற்றி உமக்கே

– S.S. ராம்சுந்தர்


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj®

RIGID PVC PIPES,FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...





மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## வேங்கடரமண பாகவதர்:



1781ல் பிறந்து 1874 வரை வாழ்ந்த கர்நாடக சங்கீத உலகமே இன்று புகழ்ந்து கொண்டிருக்கும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகள் யாவும் வெளியுலகிற்கு கொண்டுவந்த பெருமையை உடைய தியாகபிரம்மத்தின் பிரதம சீடராக விளங்கிய ஸ்ரீ வேங்கடரமண பாகவதர். இவர் ஸௌராஷ்ட்ர மொழியில் பாடிய கீர்த்தனைகள் சிலவே வந்துள்ளது. பெரும்பாலும் தெலுங்கு மொழிக் கீர்த்தனைகளாகவே உள்ளது.

## தொ. இரா. பத்மநாபய்யர்:



ஸ்ரீமத் பகவத் கீதையை ஸௌராஷ்ட்ர மொழியில் மொழி பெயர்த்து 9வது ஸௌராஷ்ட்ர பிராமண மகாநாட்டில் வெளியிட்டு கீதா அஷ்டாவதானி என்ற பட்டத்துடன் கௌரவிக்கப்பட்டார். இவர் ஒரு சுதந்திர போராட்ட தியாகியுமாவார். ராஜாஜி தலைமையில் வேதாரண்யம் சென்று உப்பு சத்தியாகிரகத்தில் சிறை சென்றவர். இவர் நிர்மாணித்த **ஸ்ரீ கீதா பவனம்** இன்றளவும் சிறந்த முறையில் நிர்வகித்து செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பில் இருக்கும் ஸௌராஷ்ட்ர பெண்மணிகள் ஸௌராஷ்ட்ரீயில் பகவத்கீதையை மனப்பாடம் செய்து பாராயணம் செய்து வருகின்றனர்.

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.08.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

TUV INDIA
TUV NORD GROUP
An ISO 9001: 2015 Certified Company

THE CONSTRUCTIVE COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

Some of our Completed Projects






HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

VSOC
Institute for Trauma
Shoulder & Knee
Sports Injury
Arthroscopy
Joint Replacement

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard




Technical Details :

- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm





Applications :
- Sarees - Bed Sheets - Furnishing - Dress Material
- Blankets - Made Ups - Shirting



SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com

N.S. Rajan



T.S. Saravanan

Official Publication:
SOURASHTRA CHAMBER OF COMMERCE
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org